காலை முரசு
பக்கங்கள் 31
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 19 ஞாயிற்றுக்கிழமை 4.08.2024 | அதிர்வு 002

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி

**வவுனியாவில் சோகம்**

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டறை – பிரிந்தகுளம் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர்

04



# மாகாணசபைகள் தேர்தல் சட்டமூலம் நாளை மறுதினமே நாடாளுமன்றுக்கு

## செப்டெம்பர் 6 அல்ல; ஓகஸ்ட் 6 அன்றாம்

கொழும்பு, ஓகஸ்ட் 04

**மாகாண சபைத் தேர்தலலைப் பழைய முறைப்படி நடத்துவதற்கான மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலம் அடுத்த மாதம் (செப்டெம்பர் மாதம்) 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்புக்காக எடுத்துக்கொள்ளப்படும் என முன்னர் வெளியான செய்திகள் தவறானவை.அந்தச் சட்டமூலம் ஓகஸ்ட் 6ஆம் திகதியே - அதாவது நாளைமறுதினமே நாடாளுமன்றத்தில் எடுத்துக்கொள்ளப் பட இருப்பதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.**

04

## யாழில் ஹயஸ் மோதி பெண்ணொருவர் சாவு!




யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – காங்கேசன்துறை வீதியில், சுன்னாகம் சந்திக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரு பெண்களை, ஹயஸ் ரக வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த பெண் படுகாயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

04




திட்டமிட்டுத்தான் காய் நகர்த்துகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தனி வழி போக மொட்டுக்கட்சி தீர்மானித்ததும், அக்கட்சியின் அடிமடியிலேயே கைய வைத்து, அதன் எம்.பிக்களை பிரித்தெடுக்கும் தனது தந்திரத்தை அவர் கட்டவிழ்த்து விட்டார்.

அதனால் உடனடி பிரச்சினை அவருக்குத்தான். நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை எம்.பிக்களின் ஆதரவுடன் அவர் தமது அரசைக் கொண்டிழுப்பதற்கு போதிய எம்.பிக்களை தந்தது மொட்டுக் கட்சிதான்.

அவரது வேலையால் மொட்டும் இரண்டாகப் பிளந்துள்ள நிலை. மொட்டுக் கட்சி எம்பிக்களும் இரண்டு அணிகளாகி, அவர்களில் ஒரு பகுதியினர் ராஜபக்ஷ தரப்புடன் உறுதியான நிலை எடுத்தால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ரணிலின் அரசு இழந்து தவிக்கும். அத்தகைய பின்புலத்தில் தற்போதைய

04




# கொழும்பில் திங்கள் கிழமை விசேட போக்குவரத்து திட்டம்

கங்காராமை விகாரையின் மறைந்த விகாராதிபதி கல்பொட ஞானீஸ்வர தேரரின் இறுதிக் கிரியை காரணமாக கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் திங்கள் கிழமை பிற்பகல் 2 மணி முதல் இரவு 8 மணிவரை கொழும்பு – கங்காராமை விகாரையை அண்டிய பகுதிகளில் இந்த விசேட போக்கு வரத்து திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்கு 50 ஆயிரம் பொலிஸ் அலுவலர்கள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைகளுக்காக 50 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த எதிர் பார்த்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான பொலிஸ் உத்தி யோகத்தர்களின் எண்ணிக்கை முன்னதாகவே கணக்கி டப்பட்டு வருவதாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, வாய்க்குப்பெட்டிகளைக் கொண்டு செல்வது உள்ளிட்ட தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் உத்தி யோகத்தர்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 45 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.




அரச அதிகாரத்தை முறைக்கேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக் கப்பெற்றுள்ளன என அந்த அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு விசேட தெரிவத்தாட்சி அலுவலர்?

## ஜனாதிபதி பச்சைக்கொடி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு மாவட்ட பதில் அரச அதிபர் அல்லாத தெரிவத்தாட்சி அலுவலரை நிய மிக்க ஜனாதிபதி ரணில் பச்சைக்கொடி காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது நிரந்தர மாவட்ட அரச அதிபர்கள் இன்றி நிர்வாக சேவை தரம் 1 ஐச் சேர்ந்த பதில் அரச அதிபர்களே பணியாற்றுகின் றனர். எனினும், மாவட்டத்தில் நிர்வாக சேவை விசேட தர அலுவலர்கள் பலர் பணியில் உள்ளனர். இவற்றைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த ஓர் அலுவலரை தெரிவத் தாட்சி அலுவலராக உடன் நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத் துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொண்டு சென்றிருந்தார்.

இது தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி, “தற்போது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நிரந்தர அரச அதிபரை நிய மிக்க விசேட அனுமதிகள் பெறப்பட வேண்டும். அதேவேளை, அது பிரதமரின் கட்டுப்பாட்டில் உள்ள விடயமாகும். இவ்வாறான நெருக்கடி இருப்பதனைக் கருத்தில்கொண்டு ஒரு விசேட தெரிவத்தாட்சி அலுவலரை நியமிக்க முடியும். அது ஏற்கனவே இடம்பெற்றும் உள்ளது. எனவே, தேர்தல்கள் ஆணைக்குழு இதனை ஆராய்ந்து ஓர் பொருத்தமான உத்தியோகத்தரை தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்க வேண்டும்.” – என்று கோரியுள்ளார்.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கு ஒரு விசேட தெரிவத்தாட்சி அலுவலர் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# ஓய்வூதியம் பெறுவோரின் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி



இலங்கையில் ஓய்வூதியம் பெறுவோரின் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஓய்வூதிய தேசிய அமைப்பின் பிரதிநிதிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“பல சந்தர்ப்பங்களில் ஓய்வூதியம் பெறுவோரின் பிரச்சினைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. தேர்தலை இலக்காகக் கொண்டு இந்த விடயம் தொடர்பில் கருத்துரைக்கவில்லை.

2016ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அதற்கு பின்னரான காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

அதனால், சுமார் 120,000 ஓய்வூதியம் பெறுவோர் பாதிப்படைந்துள்ளனர்.”– என்றார்.

# தயாசிறி – திலங்க சுமதிபால தரப்பிலான சுதந்திர கட்சி அணி சஜித்துக்கு ஆதரவு!



நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, திலங்க சுமதிபால, ரோஹண லக்ஷ்ன் பியதாஸ ஆகிய தரப்பினர்களை கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழஙந்த் தீர்மானித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுதந்திர கட்சியின் தலைமையகத்தை ஆக்கிரமித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க சுதந்திர கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிடுவது செல்லுபடியற்றது என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பில் ஓர் அணி, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் பிறிதொரு அணி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தரப்பில் பிறிதொரு அணி என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மூன்றாக பிளவடைந்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிடுகையில் –

“ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயற்குழு மற்றும் நிறைவேற்றுக்குழு கூட்டத்தை நடத்தி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது குறித்து தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதற்கமைய ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கவும், கூட்டணியில் இணைந்துக் கொள்ளவும் தீர்மானித்துள்ளோம்.

அரசாங்கத்துடன் எவரும் இணைந்துக் கொள்ள கூடாது என சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழு 2023.11.11 ஆம் திகதி ஏகமனதாக தீர்மானித்தது.

இந்த தீர்மானத்துக்கு எதிராக நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட தரப்பினர் அமைச்சு பதவிகளுக்காக அரசாங்கத்தில் இணைந்துக் கொண்டார்கள்.அரச அதிகாரத்துடன் சட்டவிரோதமான முறையில் சுதந்திர கட்சியின் தலைமை காரியாலயத்தை ஆக்கிரமித்துள்ளார்கள்.

நிமல் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திர கட்சியினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளமை செல்லுபடியற்றது.

கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் இந்த தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை கொண்டு நிறைவேற்றுக்கு குழு கூட்டத்தை நடத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏகமனதாக ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக அவர் அறிவித்துள்ளமை முற்றிலும் தவறானது.”– என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பெறுவது ரணில் அரசுக்கு அசாத்தியம் என்பது தெளிவு.

இத்தகைய சந்தர்ப்பத்தில், முக்கிய – சர்ச்சைக்குரிய – ஏதேனும் விடயத்தை அரசு நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விட்டால் பெரும்பான்மையை இழந்த ரணில அரசின் பொட்டுக்கேடு நாடாளுமன்றத்தில் அம்பலமாகிவிடும்.

இப்போது, நாளை மறுதினம் மாகாண சபைகள் தேர்தல் சட்ட மூலம் நாடாளுமன்றத்திற்கு இரண்டாவது வாசிப்புக்கு வருகின்றது.

இது சுமந்திரனின் தனி நபர் பிரேரணை என்றாலும் ஜனாதிபதி ரணிலின் ஆதரவு,ஆசீர்வாதத்தோடுதான் அது இப்போது நாடாளுமன்ற விவாதத்துக்கு வருகின்றது.

இந்த மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை விரைந்து கொண்டு வரும்படி ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்க் தேசிய கூட்டமைப்பு, ஜே.வி.பி. எல்லாம் நீண்ட பல வருடங்களாக வற்புறுத்தி வருகின்றன.

அந்தச் சட்ட மூலத்தை எதிர்க்கட்சிகள் எதிர்க்க மாட்டா, வரவேற்கும் என்று ரணில் கருதுகிறார். அது பெரும்பாலும் சரியான கணக்குதான்.

இப்போது ஆளும் தரப்பு பிளந்து, பெரும்பான்மையை இழந்து விட்டது என்று பேச்சடிபடும் இந்தச் சமயத்தில் இந்தச் சட்டமூலத்தை கொண்டு வந்தால், அதற்கு பிரதான எதிர்க் கட்சிகளும் ஆதரிப்பதால், நாடாளுமன்றத்தில் இலகுவாக அதை அங்கீகரிக்கச் செய்து விடலாம் என்று ரணில் தரப்புக் கருதுகின்றது .

ஆளும் தரப்பு உடைந்து, பிளந்து, பெரும்பான்மையை இழந்து விட்டது என்ற கதையும் ஓரளவு அடக்கப்படும் என்று கருதுகிறார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

நல்ல நகர்வுதான் போங்கள்....!

\+ + +

வடமராட்சி கிழக்கு தாளையடியில் கடல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார்.

ராஜபக்ஷ காலத்தில் நகர்த்தப்பட்ட திட்டம் அது. இப்போது அவர் – ரணில் – ஏதோ தாம்தான் அந்தத் திட்டத்தைத் தீட்டி, விடயங்களை வெற்றிகரமாக நகர்த்தியவர் போல அதைத் திறந்து வைத்து அவர் உரையாற்றுகின்றார்.

அதிகாரம் மாறும்போது இத்திட்டங்கள், அவை தொடர்பான ஏற்பாடுகள் நடக்கும்.

அணி மாறுவது எப்படி என்பதற்கு இரு படங்களை இணைத்துள்ளேன்.

அப்படங்களில் ஒன்று நேற்று முன்தினம் எடுத்தது. மற்றது சில வருடங்களுக்கு முன்னர் எடுத்தது.

ஒரே திட்டம் – இரண்டு வெவ்வேறு தரப்புகளுக்கு. ஆள்கள்தான் மாற்றம். விடயம் ஒன்றுதான்.





# தொண்டைமனாறு செல்வச் சந்நிதியான் ஆலய மஹோற்சவம் இன்று ஆரம்பம்!

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமனாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

முக்கிய திருவிழாக்களான 5 ஆம் திருவிழா 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு சதுர்த்தி விநாயகப் பெருமானுடன் முருகப் பெருமானும் எழுந்தருள்வர்.

10 ஆம் திருவிழாவான பூங்காவன உற்சவம் 13 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும். 11 ஆம் திருவிழாவான கைலாச வாகன உற்சவம் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

14 ஆம் திருவிழாவான சப்பறத் திருவிழா 17 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கும், 15 ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கும், 16 ஆம் திருவிழாவான தீர்த்தத்திருவிழா 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கும் நடைபெறும்.

தீர்த்தத்திருவிழா அன்று மாலை 6.30 மணிக்கு மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவு பெறும்.

மறுநாள் 20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 6.30 மணியளவில் தொண்டர் பூசை நடைபெறும்.

மகோற்சவ தினங்களில் சந்நிதி சுற்றாடலில் அமைந்துள்ள அன்னதான மடங்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் ஹயஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சங்கானை பகுதியைச் சேர்ந்த 51 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார் என்று நெடுங்கேணி பொலிஸார் தெரிவித்தனர்.

பிரிந்தகுளம் பகுதியில் வசிக்கும் மேற்படி குடும்பஸ்தர் நீண்ட நேரமாகியும் மகன் வீடு திரும்பாமையால் இரவு 10.30 மணியளவில் மகனைத் தேடி கிராம வீதியூடாகச் சென்றபோதே வீதியில் நின்ற யானை தாக்கியதில் அவர் மரணமடைந்துள்ளார்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையான 58 வயதுடைய இராசையா நாகராசா என்பவரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மாகாண சபைத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனினால் தனிநபர் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தின் பரிந்துரையோடு நாடாளுமன்றுக்கு அனுப்பப்பட்டிருந்த இந்தச் சட்டமூலம் இதுவரை காலமும் கிடப்பில் போடப்பட்டிருந்தது. எனினும், இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் விரைந்து நிறைவேற்றி, மாகாண சபைகளுக்கான தேர்தலையும் விரைவில் நடத்தத் தாம் ஏற்பாடு செய்வார் என கடந்த புதனன்று தம்மைச் சந்தித்த சுமந்திரன் எம்.பியிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி வழங்கியிருந்தார்.

அதற்கேற்ற வகையில் நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற சபை முதல்வருக்கும் அரசு தரப்பின் பிரதம கொறடாவுக்கும் தாம் வழிகாட்டல்கள் வழங்குவார் என ஜனாதிபதி ரணில், சுமந்திரனிடம் கூறியிருந்தார்.

அதன்படி கடந்த வெள்ளின்று சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்த விடயம் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது.

அந்தச் சட்டமூலம் செப்டெம்பர் 6ஆம் திகதி இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் எடுக்கப்படும் என அப்போது செய்திகள் வெளியாகின. ஆயினும் அது தவறு என்றும், ஓகஸ்ட் 6ஆம் திகதியே – நாளை மறுதினமே – இரண்டாம் வாசிப்புக்காக மாகாண சபைகள் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் எடுப்பது என முடிவு செய்யப்பட்டது என்றும் தற்போது சுட்டிக்காட்டப்படுகின்றது.

## நமது கருத்து

# தாமதித்த நீதி

பொதுவாக, கிரிமினல் குற்ற விடயங்களில் நடவடிக்கை எடுப்பதற்கு முறைப்பாடு வரவேண்டும் எனப் பொலிஸ் காத்திருக்கத் தேவையில்லை. ஒரு கிரிமினல் குற்றம் குறித்துத் தனக்குத் தகவல் கிடைத்ததுமே பொலிஸ் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்து விடும். ஆரம்பிக்க வேண்டும். முறைப்பாடு வரட்டும் என்று பார்த்திருக்கத் தேவையில்லை.

தேர்தல் தொடர்பான அத்துமீறல் விடயத்திலும் கூட இது பொருந்தும். எல்லா சமயங்களிலும் முறைப்பாடு வரட்டும் என்று தேர்தல் ஆணையம் பார்த்திருக்கத் தேவையில்ல. மோசமான தேர்தல் விதிமுறை மீறல் நடக்கின்றது என்று தான் அறிந்தாலேயே தேர்தல் ஆணையம் தானாகத் தலையிட்டு தன் கடமையைச் செய்ய தொடங்கி விட வேண்டும். அதுதான் முறைமை. சரியானது.

ஆனால் பல சமயங்களிலும் தேர்தல் ஆணையம் சோம்பிக் கிடப்பது போல படுத்துக் கிடந்து, நித்திரை விட்டு எழுந்து வந்து கடமையைச் செய்கின்ற மாதிரி பணியாற்றுகின்றது.

மக்களுக்கு அரச காணிகளை வழங்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 'உறுமய' திட்டத்திற்கு தேர்தல் அறிவித்து இத்தனை நாள்களுக்குப் பின்னர், இப்போதுதான் தேர்தல் ஆணையம் தடை விதித்து இருக்கின்றது.

அரசநிகழ்வை தேர்தல் பிரச்சாரமாக மாற்றும் திட்டம் என்ற காரணத்தினால் இதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பது சரியானதுதான்.

இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் இப்போது அறிவித்துள்ளது.

அரச சொத்தை - நாட்டின் காணிகளை - மக்களுக்கு வாரி வழங்கும் வேலை இது. வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிப்பது போன்றதே இத்திட்டம். தமது ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்காகவே அரச சொத்துக்களை மக்களுக்கு வாரி வழங்கி, அதன் மூலம் வாக்குகளை வளைத்து போடும் ரணில் விக்கிரமசிங்கவின் நரி தந்திர திட்டமே இது என்பது வெளிப்படையானது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டாலும் சம்பந்தப்பட்ட திட்டம் முன்னெடுக்கப்படும் என்று அந்தத் திட்டத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி செயலகத்தில் தினசரி நடத்தப்படும் பத்திரிகையாளர் மாநாட்டில் ஒரு நாள் - தேர்தல் அறிவிக்கப்படும் முன்னரே - வெளிப்படுத்தி இருந்தார்.

ஆக, இப்படி அரச காணிகளுக்கான உரித்துக்களை மக்களுக்கு வாரி இறைக்கும் உறுமய திட்டம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட போகின்றது என்பது தேர்தல் அறிவிப்பு வர முன்னரே பகிரங்கப்படுத்தப்பட்டிருந்தது. அது தேர்தல் ஆணையத்துக்கும் நிச்சயம் தெரிந்திருக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பல ஆண்டுகளாக வாராந்தம் பாடசாலைகளுக்கு பஸ் அன்பளிப்பு வழங்கல், ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் வழங்கல் போன்ற உதவிகளை தொடர்ந்து மக்கள் ஆதரவுடன் நடத்தி வருகின்றார்.

அதைத் விழுந்தடித்து விசாரித்து, நேரத்துடனேயே அதற்குத் தடை விதித்த தேர்தல் ஆணையம், வழித் தேங்காயைத் தெரு பிள்ளையாருக்கு உடைப்பது மாதிரியான - அரச சொத்துக்களை வாக்குச் சுருட்டலுக்கான அன்பளிப்பாக வழங்கும் - ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுமயத் திட்டம் தொடர்வதற்கு இடம் விட்டு பார்த்திருந்தது. நீண்ட காலம் கண் மூடி இருந்தது.

பல முறைப்பாடுகளுக்குப் பின்னர் தான் இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உறுமய திட்டத்திற்கு தேர்தல் திணைக்களம் தடை விதித்திருக்கின்றது.



# வயநாடு நிலச்சரிவு பலி 350 ஆக அதிகரிப்பு; 81 பேர் படுகாயம், 206 பேரை காணவில்லை

கேரளமாநிலம்வயநாடுபகுதியில்ஏற்பட்டநிலச்சரிவில்சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 350 ஆக அதிகரித்துள்ளது.

மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தொடரும் கடற்படையின் பங்களிப்பு குறித்து மத்திய அரசு விவரித்துள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"மோசமான வானிலை, கடினமான நிலப்பரப்பு அமைப்புகளுக்கு மத்தியில், வயநாடு மாவட்டத்தில் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய கடற்படை மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை முழு வீச்சில் தீவிரமாகத் தொடர்கிறது. நிவாரண முயற்சிகளை அதிகரிக்கவும், பேரழிவால் பாதிக்கப்பட்ட உள்ளூர் மக்களுக்கு ஆதரவளிக்கவும் கூடுதல் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தற்போது 78 கடற்படை வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் குழுக்கள் சூரல்மலா, முண்டக்கை பகுதிகளின் பல இடங்களில் பணியில் ஈடுபடுகின்றனர். மேலும், பேரிடர் நிவாரணப் படையினர், உள்ளூர் நிர்வாகத்துடன் கைகோர்த்து செயல்படுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள், உணவு மற்றும் இதர பொருள்களை தொடர்ந்து வழங்குவதற்காக ஒரு குழு செயல்படுகிறது. மற்ற குழுக்கள் பிழைத்தவர்களைத் தேடுதல், இடிபாடுகளை அகற்றுதல், உடல்களை மீட்டெடுக்கும் பணி போன்றவற்றில் ஈடுபடுகின்றது. காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதற்காக சூரல்மலாவில் மருத்துவ மையம் அமைக்கப்பட்டுள்ளது.

சிக்கித் தவிக்கும் மக்களை விரைவாக வெளியேற்றுதல், அடிப்படை வசதிகள், மருத்துவ உதவிகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக இந்திய கடற்படை உள்ளூர் நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது" என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, பேரிடர் பாதித்த வயநாட்டில் தேடுதல் மற்றும் மீட்பு பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளது என்றும் இன்னும் 206 பேரை காணவில்லை எனவும் கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பினராயி விஜயன்,

"இதுவரை 215 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 87 பெண்கள், 98 ஆண்கள், 30 குழந்தைகள். இதுவரை 148 உடல்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இன்னும் 206 பேர் காணவில்லை. 81 பேர் காயமடைந்துள்ளனர். பல்வேறு மருத்துவமனைகளில் அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். சாலியாற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள் மற்றும் பாகங்களை அடையாளம் காண்பதில் சிரமம் உள்ளது. 67 உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. அடையாளம் தெரியாத உடல்களுக்கு இறுதிச் சடங்குகள் செய்யும் பணியை பஞ்சாயத்துகள் மேற்கொள்ளும்.

தீயணைப்புப் படை, தேசிய பேரிடம் மீட்புப் படை, வனத்துறை, பொலிஸ், இராணுவம் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த தன்னார்வத் தொண்டர்கள் என 1,419 பணியாளர்களை உள்ளடக்கிய தேடுதல் குழுவினர், பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். மனித மீட்பு ரேடார் மற்றும் ட்ரோன் அடிப்படையிலான ரேடார் போன்ற மேம்பட்ட கருவிகள் மீட்புப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன."– என்றார்.





# உயிரிழந்த மீனவரின் குடும்பத்தினருக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்



நெடுந்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் படகொன்று இலங்கை கடற்படையினரின் படகொன்றுடன் மோதியதில் உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

அறிக்கையொன்றின் மூலம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ள தமிழக முதலமைச்சர், உயிரிழந்த மீனவரின் குடும்பத்திற்கு தனது இரங்கலையும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தூதரங்கள் மூலம் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் மேலும் பல மீனவர்களை இழக்க நேரிடும் என்றும் தனது அறிக்கையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார்.









# சோமாலியா தலைநகரில் பயங்கரவாத தாக்குதல்!

## 32 பேர் உயிரிழப்பு

சோமாலியா தலைநகரில் அல்-கொய்தாவின் கிளை அமைப்பான அல் ஷபாப் பயங்கரவாத தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்தவகையில், சோமாலியா தலைநகர் மொகடிசுவில் உள்ள லிடோ கடற்கரை அருகே அமைந்துள்ள பிரபல உணவகம் ஒன்றிலேயே அந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அந்த உணவகத்திற்குள் நுழைந்த அல் ஷபாப் அமைப்பினர் அங்கு இருந்தவர்கள் மீது சரமாரி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என தெரியவந்துள்ளது.

இதன்போது, சிலரை பணயக்கைதிகளாக சிறைபிடித்ததுடன், தங்கள் உடலில் மறைத்து கட்டிக்கொண்டு வந்த வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்து தற்கொலைப்படை தாக்குதலும் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர் என கூறப்படுகின்றது.

இந்த நிலையில், தகவலறிந்து அங்கு சென்ற பாதுகாப்புப் படையினர் அதிரடியாக செயல்பட்டு பணயக்கைதிகளை மீட்டுள்ளதுடன் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளையும் சுட்டுக் கொன்றுள்ளனர் என தெரியவந்துள்ளது.

# இன்ஸ்டாகிராமிற்கு துருக்கி தடை; ஐந்து கோடி பயனாளர்கள் பாதிப்பு

மத்திய கிழக்கு நாடான துருக்கி இன்ஸ்டாகிராமை தடை செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில், துருக்கிய அரசாங்கம் இன்ஸ்டாகிராமை முடக்கியுள்ளதாகவும் ஆனால் இந்த தடை குறித்து அரசு எந்த விளக்கமும் அளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துருக்கியில் இன்ஸ்டாகிராமிற்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக ஐந்து கோடி பயனாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என துருக்கி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், துருக்கியின் மொத்த மக்கள் தொகை சுமார் 8.5 கோடி ஆகும். அதேவேளை துருக்கிய மக்கள் தொகையில்



பெரும் பகுதியினர் இன்ஸ்டாகிராமைப் பயன்படுத்துகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பங்களாதேஷ் கலவரத்தில் 32 குழந்தைகள் உயிரிழப்பு









பங்களாதேஷில் அண்மையில் பொலிஸாருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் குறைந்தது 32 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் என யுனிசெப் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் போராட்டம் இடம்பெற்ற இடங்களை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், உயிரிழந்த குழந்தைகள் ஐந்து வயது நிரம்பாதவர்கள் எனவும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகு, அரசு நிர்ணயித்த இட ஒதுக்கீடு முறை குறைக்கப்பட்டது. ஆனால் மாணவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், உயிரிழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், பொலிஸ் காவலில் உள்ளவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பங்களாதேஷில் கடந்த சில நாள்களாக நடைபெற்ற போராட்டங்களில் 266 பேர் உயிரிழந்ததோடு, 7,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# ஜனநாயகக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளராக கமலா பெயரிடப்பட்டார்

வரலாற்றிலேயே, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் முதல் ஆசிய வம்சாவளி பெண் அரசியல்வாதியாக கமலா ஹாரிஸ் திகழ்கின்றார்.

2024ஆம் ஆண்டுக்கான அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்புமனுவைப் பெறுவதற்குத் தேவையான பெரும்பான்மையான கட்சிப் பிரதிநிதிகளை வென்றெடுப்பதில் அமெரிக்க துணைத் தலைவர் கமலா ஹாரிஸ் வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கமைய, இந்த ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளராக கமலா ஹாரிஸ் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கமலா ஹாரிஸ், அனைத்து மாநாட்டுப் பிரதிநிதிகளிடமிருந்தும் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றுள்ளார் எனவும், வாக்கெடுப்பு முடிவடைந்ததைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக அவர் போட்டியிடுவார் எனவும் ஜனநாயக தேசியக் குழுவின் தலைவர் ஜெய்ம் ஹாரிசன் உறுதிபடுத்தியுள்ளார்.

இதனை தொடர்ந்து, தான் இந்த வேட்புமனுவை அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளவுள்ளதாக கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

இதன் மூலம், அமெரிக்க அரசியல் வரலாற்றில் முதல் ஆசிய வம்சாவளி பெண் அரசியல்வாதியாக கமலா ஹாரிஸ் போட்டியிடுகின்றமை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.



## யுக்திய நடவடிக்கை:

# போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் 732 பேர் கைது!

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 732 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 719 ஆண்களும் 13 பெண்களும் அடங்குகின்றனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 10 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 10 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 260 கிராம் 76 மில்லி கிராம் ஹெரோயின், 250 கிராம் மில்லி 02 கிராம் ஐஸ், 21,139 கிராம் மில்லி 574 கிராம் கஞ்சா , 168 போதை மாத்திரைகள் மற்றும் 1,906 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

# சீகிரியாவில் கரடி தாக்கியதில் இருவருக்குப் பலத்த காயம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சீகிரியா – இலுக்வல்ல பிரதேசத்தில் கரடி தாக்கியதில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் தம்புள்ள மற்றும் பொலன்னறுவ வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த ஒருவர் தனது வீட்டுக்கு வெளியிலுள்ள மலசல கூடத்திற்கு செல்லும் போதும், மற்றையவர் வீட்டுக்கு வெளியில் வெற்றிலை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதும் கரடித் தாக்குதலுக்கு உள்ளாகினர் என வன விலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# அனைத்து மாவட்ட அரச அதிபர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்புரை

(ந.லோகதயாளன்)

சகல மாவட்ட செயலகங்களிலும் உள்ள ஒருங்கிணைப்பு அலுவலகங்களை உடனடியாக மாவட்ட அரச அதிபர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரை வழங்கியுள்ளது.

மாவட்ட அரச அதிபர்கள் அனைவருக்கும் தேர்தல் தொடர்பான வழிகாட்டல் கலந்துரையாடல் தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்றது. இதன்போதே இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பணிப்புரைக்கமைய சகல மாவட்ட செயலகங்களிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட அலுவலகங்களை உடன் மாவட்ட அரச அதிபர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இதேபோன்று அரச சொத்துக்கள் எவையும் கட்சி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படாமல் இருப்பதனையும் உறுதி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.







# யாழில் சர்வமதத் தலைவர்களை சந்தித்து ஆசி பெற்ற ஜனாதிபதி

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லை ஆதீனம் ஸ்ரீசோமசுந்தரம் அவர்களை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

அதனையடுத்து, யாழ். ஆயரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ். ஆயர் அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.



அதனைடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் யாழ். நாக விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்டார்.

புனித தலத்தை சென்றடைந்த ஜனாதிபதி முதலில் புத்த ஸ்தூபிக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டமையோடு, யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையின் விகாராதிபதி மீகஹஜந்துரே சிறிவிமல நாயக்க தேரரைச் சந்தித்து நலன் விசாரித்தார்.



'பௌத்த இந்து சமய மன்றம்' சார்பில் அதன் தலைவர் கலாநிதி எம். மோகனையும் ஜனாதிபதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்வில், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.








# யாழுக்கு மாத்திரமா தமிழ்ப் பொது வேட்பாளர்?



புருஜோத்தமன் தங்கமயில்


ஜனாதிபதித் தேர்தலில் வழக்கத்துக்கு மாறாக இம்முறை அதிகளவான வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று தெரிகிறது. ஒவ்வொரு நாளும் வேட்பாளர்களுக்காகம கட்டுப்பணம் செலுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைப் பார்த்தால் முப்பது முதல் நாற்பது வரையிலான வேட்பாளர்களுக்குள் ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டிய நிலை வரலாம்.

எனினும், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது இன்னமும் தெரியவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்களின் வாக்குகளை ஓரணியில் திரட்டப் போகும் அந்த ஜனவசியமுள்ள வேட்பாளரைக் காண பலரும் ஆவலாக இருக்கிறார்கள். ஆனால், பொதுக் கட்டமைப்பினரால்தான், இன்னமும் வேட்பாளர் ஒருவரை தேடிப் பிடிக்க முடியவில்லை. கட்டுப்பணம் செலுத்துவதற்கு இன்னமும் பதினொரு நாள்கள் மாத்திரமே இருக்கின்றன. அதற்குள் தமிழ்ப் பொது வேட்பாளர் கண்டுபிடிக்கப்படுவாரா என்பது மனதை படபடக்க வைக்கும் கேள்வி. ஆக, இப்படித்தான் இந்தப் பத்தியை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலை, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு பொது வாக்கெடுப்புக்கான களமாக கையாள வேண்டும். அதன்மூலம், சர்வதேசத்துக்கு தமிழ் மக்களின் ஒருமித்த செய்தியை வழங்கலாம் என்பது, தமிழ்ப் பொது வேட்பாளர் கோசத்தோடு அரங்கிற்கு வந்தவர்களின் ஆரம்ப கால நிலைப்பாடு. இப்போது, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக கைச்சத்திட்டுள்ளவர்களிடம் பொது வாக்கெடுப்பு, சர்வதேசத்துக்கு செய்தி சொல்லுதல் என்ற கோசங்கள் இல்லை. மாறாக, பிரிந்து செல்லும் தமிழ் வாக்குகளை ஒருங்கிணைத்தல் என்பது மாத்திரமே எஞ்சியிருக்கின்றது. அரசியல் ஆருடங்களை கூறுதல், பத்திகளில் வகுப்பெடுத்தல் என்பதற்கும் செயற்பாட்டு அரசியலுக்கும் இடையில் பாரிய இடைவெளியுண்டு. இப்போது, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளும் அரசியல் பத்தியாளர்களும், இன்னும் சில சமூக செயற்பாட்டாளர்களும் கைச்சாத்திட்டிருந்தாலும், அந்தக் கட்டத்தை அடைவதற்கே அவர்கள் பெரும்பாடு பட்டாகிவிட்டது. தமிழ்த் தேசியப் பரப்பில் இன்று இயங்கும் அரசியல் கட்சிகளும், தலைவர்களும் தேர்தல் – வாக்கு அரசியலில் தங்கியிருப்பவர்கள். என்ன ஆனாலும் தேர்தல் வெற்றிதான் அவர்களின் முதல் இலக்கு. அதனை அவர்கள் கைவிடமாட்டார்கள். அப்படியான நிலையில், பொதுக் கட்டமைப்பு ஒன்றுக்குள் தேர்தல் ஆதாயங்கள் அற்ற செயற்திட்டத்துக்காக ஒன்றிணைதல் என்பது அவ்வளவு சாத்தியமில்லை. அதனை, பொது வேட்பாளர் விடயத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் அரசியல் பத்தியாளர்கள் இப்போதுதான் உணரத் தொடங்கியிருக்கிறார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை கண்டடைவது என்பது பெரும் சிக்கல்கள் நிறைந்ததாக இருப்பதாக, சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களில் பெரும் சினத்தோடு வெளிப்படுத்தியிருக்கிறார். யாரை யாவது, ஒருவர் வேட்பாளராக முன்மொழிந்தால், அதனை மற்றவர்கள் எதிர்க்கிறார்கள். வேட்பாளராக முன்மொழியப்பட்டவர்களிடம் பேசினால், அவர்கள் விலகி ஓடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு நாளும் வேட்பாளரைத் தேடும் படலம் தொடர்கிறது. மற்றறொரு பக்கம், பொது வேட்பாளர் எந்தக் கட்சியின் சின்னத்தின் கீழ் போட்டியிடுவார் என்பது சார்ந்தும் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ள கட்சிகளுக்குள் பிரச்சினையிருக்கின்றது. சில கட்சிகள் தங்களது சின்னத்தை தர மறுக்கின்றன. ஒரு கட்சி சின்னத்தை வழங்க முன் வந்தாலும், அவர்கள் அடுத்த பொதுத் தேர்தலை குறி வைத்து சின்னத்தை பிரபலப்படுத்தும் நோக்கத்

தொடர்ச்சி▼





# யாழுக்கு மாத்திரமா தமிழ்ப் பொது வேட்பாளர்?

தொடர்ச்சி▲

தோடு வருகிறார்கள் என்று மற்றக் கட்சித் தலைவர்கள் எதிர்க்கிறார்கள். இந்தக் குழப்பங்களினால், சுயேச்சை வேட்பாளராக யாரையாவது நிறுத்துவது தொடர்பிலும் பேசப்படுகிறது. அப்படியானால், அந்த வேட்பாளர் ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாக வேண்டும். இப்போது, அப்படியானவர்களிடமும் பேச்சுவார்த்தைகளை பத்தியாளர்கள் நடத்துகிறார்கள். ஆனால், அதுவும் இந்தப் பத்தி எழுதப்படும் வரையில் சாத்தியமாகவில்லை. இறுதியாக, எம்.கே.சிவாஜிலிங்கத்திடம்தான் பொதுக் கட்டமைப்பினர் தஞ்சமடைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர், ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டிருக்கிறார்.

தமிழரசுக் கட்சி பொது வேட்பாளர் விடயத்தின் பக்கத்தில் இல்லை. பொது வேட்பாளர் விடயத்தை கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்குள் எடுத்துச் சென்றால், அதனை பெரும் பொல்லாப்பாக பார்ப்பவர்களே பெரும்பான்மையினர். மாவை சேனதிராஜா உள்ளிட்ட ஓரிருவரைத் தவிர யாரும் பொது வேட்பாளர் விடயத்தின் பக்கத்தில் இல்லை. ஏற்கனவே, பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவாக ஊடகங்களில் பேசிவந்த சிவஞானம் சிறீதரன், அதிலிருந்து விலகிவிட்டார். அவர், இப்போது, சமஷ்டி குறித்து பேசும் வேட்பாளர்களைத் தேடிக் கொண்டிருக்கிறார். அவர்களுடன் பேசி, அதில் ஒருவருக்கு ஆதரவு வழங்கலாம் என்பது சிறீதரனின் தற்போதைய நிலை. இந்த நிலைப்பாடு நாளை எப்படி மாறும் என்பது தெளிவில்லை. கடந்த காலங்களில் அவரும் மைத்திரிபால சிறீசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு ஆதரவளித்திருக்கிறார். அவர்கள், ஒருபோதும் சமஷ்டி உத்தரவாதத்தை தமிழரசுக் கட்சியிடம் வழங்கியிருக்கவில்லை.

பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான பொதுக்கட்டமைப்பில்இணைந்திருக்கின்றகூட்டமைப்பின் முன்னாள் பங்காளிக் கட்சிகளாக ரெலோவும், புளொட்டும் பொதுத் தேர்தல் தொடர்பில் பெரும் குழப்பத்தில் இருக்கின்றன. ரெலோவுக்குள் குருசாமி சுரேந்திரன் உள்ளிட்ட ஓரிருவரைத் தவிர யாரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் குத்து விளக்குச் சின்னத்தில் போட்டியிடுவதில் ஆர்வத்தோடு இல்லை. எப்படியாவது, பொதுத் தேர்தலுக்கு தமிழரசுக் கட்சியோடு இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வீட்டுச் சின்னத்தில் தஞ்சமடைந்து விட வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு. இந்த நிலைப்பாடுதான் புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இருக்கின்றது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதான கட்சிகளின் தலைவர்கள் இருவர், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தினை 'முட்டாள்தனமானது' என்று, தமிழரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலும், பத்தியாளர்கள் சிலரிடத்திலும் கூறியிருக்கின்றார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை மறைந்த இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஏற்கனவே 'முட்டாள்தனமானது' என்று கூறியிருக்கிறார்கள். அதனை சில வர்த்தகர்கள் பெரும் விமர்சனமாக முன்வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு, பொதுக் கட்டமைப்பில் உள்ள தலைவர்களே அதே நிலைப்பாட்டில் இருக்கிறர்கள் என்பதை யாராவது எடுத்துக் கூற வேண்டும். பொது வேட்பாளர் என்பது முட்டாள்தனமான நிலைப்பாடுஎன்றஉணர்நிலையில்இருப்பதால்தான், பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ள கட்சிகளின் தலைவர்கள் கட்சித் சின்னத்தை பொது வேட்பாளருக்காக வழங்க தயங்குகிறார்கள். தங்களின் கட்சிச் சின்னத்தை பொது வேட்பாளருக்கு வழங்கி, சிலவேளை அவர் சில ஆயிரம் வாக்குகளைத்தான் பெற்றுவிட்டால், அது தங்களின் கட்சிக்கான பெரும் பின்னடைவாக மாறிவிடும் என்பது அவர்களின் பெரும் அச்சம்.

யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டிருக்கின்ற ஊடகங்கள் மற்றும் ஒருசில புலம்பெயர் ஊடகங்களைத் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் உரையாடல் கட்டத்துக்கே வருவதில்லை.

தொடர்ச்சி▼

# யாழுக்கு மாத்திரமா தமிழ்ப் பொது வேட்பாளர்?

தொடர்ச்சி▲

ஏனெனில், பொது வேட்பளர் விடயத்தினை முன்னெடுத்தவர்கள், அதனை யாழ்ப்பாணத்துக்குள்ளேயே பெரும்பாலும் வைத்துக் கொண்டிருந்தார்கள். அதற்கான உரையாடல்களை ஒரு போதும் மக்களோடு அவர்கள் நிகழ்த்தவில்லை. அதிலும், அவர்கள் யாழ்ப்பாணத்தைத் தாண்டி பெரும்பாலும் வெளியில் வந்ததேயில்லை. ஒருசில தடவை வவுனியாவில் கூடிப் பேசினார்கள். மற்றப்படி, தமிழர் தாயகப் பிரதேசங்களின் எண்ணங்கள் தொடர்பில் அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. இன்னொரு பக்கம், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட்டுள்ள கட்சித் தலைவர்கள், பத்தியாளர்களில் பெரும்பான்மையினர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒரு கட்சித் தலைவரும் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திடவில்லை. கைச்சாத்திட்டுள்ள ஏழு கட்சிகளில் ஆறு தலைவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மாத்திரமே மன்னாரைச் சேர்ந்தவர். பத்தியாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் தரப்பிலும் அதுவே நிலைமை. கைச்சாத்திட்டுள்ள பதின்நான்கு பேரில், நால்வர் மாத்திரமே கிழக்கைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மன்னார். மீதியுள்ள ஒன்பது பேரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். இது, தமிழர் தாயகப் பிரதேசத்தின் ஒருங்கிணைவை கேள்விக்குள்ளாக்கும் நிலை. இது, பிரதேசவாதம் பேசும் அரச துணைக்குழுக்களுக்கும் உதிரிகளுக்கும் பலம் சேர்க்கும் நடவடிக்கையாகும்.

மட்டக்களப்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும், கருணா அம்மான் என்கிற விநாயகமூர்த்தி முரளிதரனும் தொடர்ச்சியாக பிரதேசவாதத்தை தூண்டி தங்களின் அரசியல் இருப்பை தக்க வைக்க முயல்பவர்கள். தமிழ் அரசியலை யாழ்ப்பாண மேலாதிக்கம் கையாளுகின்றது, அதனால் கிழக்கு மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது தொடர் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டில் பகுதியளவில் உண்மையும் இருக்கின்றது. தமிழ்த் தேசியப் பரப்பில் எடுக்கப்படும் தீர்மானங்களில் அநேகமானவை, யாழ்ப்பாணத்துக்குள் இருந்துதான் எடுக்கப்படுகின்றன. இருப்பதில், தமிழரசுக் கட்சி மாத்திரமே வடக்கு கிழக்கு பூராவும் பரந்து பட்ட கட்டமைப்பைக் கொண்டிருக்கின்றது. தலைமைத்துவ சபை, மத்திய குழு என்று அனைத்துக் கட்டங்களிலும் வடக்கு கிழக்கிற்கான சரியான பிரதிநிதித்துவம் குறித்து குறிப்பிட்டளவு கவனத்தோடு இருந்து வருகின்றது. மற்றப்படி, சிவில் சமூக அமைப்புக்கள் என்ற பெயரில் செயற்பட்டாலும், தோன்றி மறைந்த தமிழ் மக்கள் பேரவை ஆயினும், இப்போது உயிர்த்துள்ள தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஆயினும் அதில், கிழக்கு மக்களின் குரல்களுக்கான இடம் வழங்கப்படுவதில்லை. அதனை விமர்சனமாக முன்வைத்தால், அதனை புறங்கையால் தள்ளும் மனநிலையிலேயே இருக்கிறார்கள். இவ்வாறான நிலைமையைத்தான், பிள்ளையானும் கருணாவும் அறுவடை செய்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், வடக்கு கிழக்கு பிரிப்பு என்பது நிர்வாக ரீதியில் மாத்திரமல்லாமல், தமிழ்த் தேசிய அரசியலுக்குள்ளும் நிகழ்ந்துவிடும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பிலான விடயம் பற்றி மட்டக்களப்பைச் சேர்ந்த இளம் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் இந்தக் பத்தியாளரிடம் கீழ்க்கண்டவாறு கூறினார். “...கிழக்கு மாகாணத்தின் அன்றாடப் பிரச்சினைகள் தொடர்பில், தமிழ்த் தேசிய அரசியலில் தங்களை முக்கிய தரப்பினர் என்று கருதுபவர்கள் அக்கறை கொள்வதில்லை. கிழக்கின் மூன்று மாவட்டங்களும் சிங்கள ஆக்கிரமிப்பு மற்றும் நிர்வாக அத்துமீறல்களினால் நாளுக்கு நாள் தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்படுகின்றன. அதனை தடுப்பதற்கான வழி வகைகள் குறித்து யாரும் சிந்திக்கிறார்கள் இல்லை. இந்த விடயத்தை முன்வைத்துத்தான், கிழக்கினை மீட்கிறோம் என்று சொல்லிக் கொண்டு அரச ஆதரவுக் கட்சிகளும், உதிரிக்குழுக்களும் கிழக்கில் அரசியல் செய்கின்றன. வாக்குகளைப் பிரிக்கின்றன. இப்போதும், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை யார் முன்னெடுக்கிறார்கள் என்று பாருங்கள், அவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்துக்குள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களின் சிந்தனை எல்லை, யாழைத் தாண்டவில்லை. கிழக்கில் ஒரு சிலரை ஒப்புக்காக பொதுக் கட்டமைப்பில் இணைத்திருக்கிறார்கள். அவர்களில் அநேகரை யாரென்றே மக்களுக்குத் தெரியாது. இதுதான் தற்போதுள்ள நிலை. இது தொடர்ந்தால், பிரதேசவாத அரசியல் மோசமான கட்டத்தை எட்டும். அது, தமிழ்த் தேசிய அரசியலுக்கு பெரும் அச்சுறுத்தலாகும்...” என்றார்.

தமிழ்த் தேசிய அரசியலில் நம்பிக்கையிழந்து, பிளவுண்டிருக்கின்ற மக்களை ஓரணியில் இணைக்கும் நோக்கோடு ஒரு செயற்பாட்டை முன்னெடுத்தால், அதன் அடிப்படைகள் அனைத்தும் சரியாக இருக்க வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பாக கூடியிருப்பவர்களின் ஆரம்பமே கோணலாக இருக்கின்றது. அங்குள்ள யாரும், ஒரு செயற்பாட்டின் ஆரோக்கியத்தன்மை தொடர்பில் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மாறாக, தனிப்பட்ட தன்முனைப்பு மனநிலைக்காக, தமிழ்த் தேசிய அரசியலைக் கையாள முயல்கிறார்கள். இது, உண்மையிலேயே தமிழ் மக்களை இன்னும் இன்னும் குழப்பகரமான கட்டத்துக்குள்ளும் பிளவுக்குள்ளும் தள்ளும். திறந்த மனதோடும் வெளிப்படையான உரையாடலோடும் செய்யப்படாத விடுதலை அரசியல் குறித்து சந்தேகம் கொள்ள வேண்டியது அவசியமானது. ஏனெனில், அந்த செயற்பாடுகளுக்குப் பின்னால், வேறு சக்திகளின் நீளும் கரங்கள் இருக்கலாம். இப்போது, தமிழ் மக்கள் அந்தக் கரங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும். இல்லையென்றால், தொடர் குழப்பங்களினால் சில தரப்பினர் தமிழ்த் தேசிய அரசியலின் இருப்பையே காணாமல் ஆக்கிவிடுவார்கள்.



# இளம் பிரசவத் தாய் மரணம் குறித்து நீதி விசாரணைக்கு

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை

மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் ஏற்பட்ட மரியராஜ் சிந்துஜாவின் மரணம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு வைத்தியத்துறை கடந்து சட்டத்துறை சார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு மன்னார் மாவட்டம் பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோருக்கு ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

திருமதி மரியராஜ் சிந்துஜா (வயது 27) என்பவர் கடந்த மாதம் ஒன்பதாம் திகதி மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுள்ளார். 11 ஆம் திகதி தாயும் சேயும் நலமாக வீடு சென்றுள்ளனர். ஏழு நாள்களின் பின்னர் தையல் வெட்டுவதற்காக 16-07- 2024 அன்று முருங்கன் வைத்தியசாலைக்கு சென்றுள்ளனர். பின்னர் 27-7-2024 இரவு குருதி பெருக்கு காரணமாக அன்று இரவு மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சேர்ந்துள்ளார். மறுநாள் 28-11-2024 காலை 7:00 மணி வரை எந்த வைத்தியர்களும் பார்வையிடவில்லை. விடுதிக்கு பொறுப்பான வைத்தியர்கள் தங்கும் விடுதியில் இருந்துள்ளனர். தாதிய உத்தியோகத்தரால் வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டும் கூட அவர்கள் வரவில்லை.

ஆகவே வைத்தியர்களின் பொறுப்பற்ற செயல்பாட்டால் இவர் மரணம் அடைந்துள்ளார். அரச வைத்திய சாலைகளில் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் நடைபெறுவது வாடிக்கையாகிவிட்டது. அதுவும் இரவு நேரங்களில் இந்தநிலை தொடர்கின்றது. உயிருடன் விளையாடும் அசட்டைத்தனங்கள் தொடர்கின்றன. மருத்துவ தவறு எனும் சட்ட பாதுகாப்பு கவசத்தினால் தினந்தோறும் நாடு முழுவதும் பலர் இறந்து விடுகின்றனர். இந்த விடுதிக்கு பொறுப்பாக இருந்த வைத்தியரின் பொறுப்பற்ற செயற்பாட்டால் ஒரு பட்டதாரி இளம் குடும்ப பெண்ணை கொலை செய்து விட்டனர். இவர்கள் இந்தப் பெண்ணின் மரணத்திற்கு பொறுப்புக்கூற வேண்டும் பொறுப்பேற்றல், பொறுப்பு கூறுதல், பகிர்ந்து கொள்ளுதல் இம் மூன்றும் வைத்திய துறையின் அணிகலன்களாக இருக்க வேண்டும். உயிரோடு உறவாடும் உன்னத பணியை செய்பவர்கள் இப்படி பொறுப்பற்று நடந்து கொள்ளலாமா? ஏலவேயும் இவ்வைத்தியசாலையில் இவ்விதமான மரணங்கள் நிகழ்ந்துள்ளன. இவரின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை நீதியாக வெளிவருமா என்னும் சந்தேகம் எழுகிறது. எனவே இச்சம்பவத்தினை திட்டமிட்ட குற்றமனமுள்ள கொலையாகவே கருதுகிறோம். பொறுப்பற்ற உத்தியோகத்தர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஏனைய நோயாளர்களாவது பாதிக்கப்படுவதில் இருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். இறந்தவரை மீட்டு விட முடியாது. தண்டனை ஒரு பொருட்டல்ல. ஆனால் இவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, இவ்விதமானவர்களை இந்த மருத்துவ துறையில் இருந்தே அகற்ற வேண்டும். குற்றவாளியை குற்றவாளியே விசாரிக்க முடியாது. கங்காரு நீதிமன்ற பொறிமுறையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதனை விசாரணை செய்வதற்கு வைத்தியத்துறை கடந்து சட்டத்துறை சார்ந்தவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். இந்த விசாரணையை மூடி மறைக்காமல் நீதி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். - என்று உள்ளது.

# பெண்களால் துன்புறுத்தப்படுகின்ற ஆண்களும் முறைப்பாடு செய்யலாம்

## பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு

பெண்களால் பாலியல் ரீதியில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகும் பட்சத்தில் அது தொடர்பில் முறையீடு செய்ய வயதுவந்த ஆண்களுக்கும் உரிமை உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமூகத்தில் பதிவாகும் சம்பவங்களை அவதானிக்கும் போது பெண்களினால் ஆண்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டத் திருத்தச் சட்டத்தின் 345 ஆவது பிரிவின்படி இத்தகைய குற்றச் செயல்கள் தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆண், பெண் என்ற வேறுபாட்டை கருத்திற் கொள்வதில்லையென பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




ஆண்களோ அல்லது சிறுவர்களோ பெண்களால் ஏதேனும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யும்படி பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 176 கிலோ கஞ்சாவுடன் மூவர் சிக்கினர்

## கிளிநொச்சி வேரவில் கடற் பகுதியில் நேற்று மாலையில்





(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 176 கிலோ கஞ்சாவுடன் கிளிநொச்சி வேரவில் கடற் பகுதியில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து படகில் கடத்தி வந்த சமயம் நேற்று மாலை கடற் படையினரின் ரோந்து அணியினர் கஞ்சாவைக் கைப்பற்றியமையோடு கஞ்சாவைக் கடத்தி வந்த படகில் இருந்த மூவரையும் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் சந் தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக் கைகளிற்காக முழங்காவில் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் இவ்வாறு கைப்பற்றப் பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 70 மில்லி யன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.



# நல்லூர் வருடாந்த உற்சவ ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என யாழ் மாநகர சபை ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மாநகரசபை ஆணையாளர் தலைமையில் நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை நடை பெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ் பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார, சுகாதார வைத்திய அதிகாரிகள், ஆலய சூழலுக்கு அரு கில் வசிக்கும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலின் முடிவில் ஊடகங்களைச் சந்தித்த மாநகர சபை ஆணையாளர் நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழா தொடர்பில் கலந்துரையாடி சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு உள் ளன எனவும் திருவிழா ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு உள் ளன எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இத்திருவிழா காலத்தில் பல்வேறு நடைமுறைகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டு உள்ளதாகவும் அத்த கைய அனைத்து நடைமுறைகளையும் அனைவரும் பேண வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.



# நல்லூர்க் கந்தன் உற்சவ கால நடைமுறைகள், தீர்மானங்கள்

நல்லூர்க் கந்தன் திருவிழா காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், நடைமுறைகள், தீர்மானங்கள் தொடர்பில் மாநகர சபை அறிவித்தல் விடுத்துள்ளது.

நல்லூர் கந்த சுவாமி ஆல திருவிழா முன்னேற்பாடுகள் தொடர்பான முதலாவது கலந்துரையாடல் மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பெருந்திருவிழா வெளியேற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டு உள்ளன என ஆணையாளர் தெரிவைத்துள்ளார் :-

1. ஆலயச் சூழலில் ஆலய வெளி வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகள் 07.08.2024 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் 04.09.2024 நள்ளிரவு வரை முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கும்.

2. பிரதான வீதித்தடைகள்: பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம், அரசடிச்சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச்சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார பாதுகாப்பு தேவைகளிற் கேற்ப மேற்படி வீதித்தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

3. கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்தி சந்தியை அடைந்து யாழ் நகரை அடைய முடியும்.

யாழ் நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும்.

விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச்சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்-தித்துறை வீதியை அடைந்தும், செட்டித் தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

4. தூக்குக் காவடிகள் வழமை போல் பருத்தித்துறை வீதி வழியாக உள் நுழைந்து ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிரக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

ஆலய வீதிச்சூழலில் வீதித்தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமை போல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

6. உற்சவ காலங்களில் சிறுவர்களைக் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.

7. ஆலய வெளி வீதி குழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளி பரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.

8. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

9. உற்சவ காலங்களில் ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

10. உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும்.

உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரகரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது

12. ஆலயச் சூழலில் ட்ரோன் (Drone) கமராக்களைப் பயன்படுத்தி காணொளி பதிவு செய்யவது தவிர்க்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் பெருந்திருவ-ிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.




# தபால்மூலமாக வாக்காளிப்பதற்கு நாளை வரை விண்ணப்பிக்கலாம்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தபால்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை நாளையுடன் நிறைவடையவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களை தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியேகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால்மூல வாக்களிப்புக்கான விண்ணப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் காலம் நீடிக்கப்படுமென பரவும் தகவல் பொய்யானதெனவும் தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, உரிய வாக்களிப்பு நிலையத்தைத் தவிர்ந்த வேறு இடங்களில் வாக்களிக்க வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது.

உரிய வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாது என்ற நியாயமான அச்சம் ஏற்படும் போது வேறு வாக்களிப்பு நிலையத்தில் வாக்களிக்குமாறு கோர முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கடந்த 26 ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் பரவும் பொய்யான தகவல்களை நிராகரிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.




# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்படுகின்ற சம்பவங்கள் அதிகரிப்பு

கட்டுநாயக்க விமான நிலையத்தில், கடந்த 5 வருடங்களில் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 181 போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

எல்லை கண்காணிப்பு பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் 62 போலி ஆவணங்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பரசூட் சாகசத்தின் போது விபத்து; இராணுவ வீரர்கள் இருவர் காயம்

வெல்லவாய ஊவா குடாஓயா கமாண்டோ ரெஜிமெண்ட் பயிற்சி நிலையத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வான் சாகச நிகழ்வின் போது இடம்பெற்ற விபத்தில் இரண்டு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையத்தில் பயிற்சிகளைப் பெற்று வெளியேறும் இராணுவ வீரர்களுக்காக விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, வான் சாகசத்தில் ஈடுபட்ட இரண்டு வீரர்களே விபத்தில் சிக்கியுள்ளனர். இவர்களில் ஒருவரது பரசூட் மரங்கள் நிறைந்த பகுதியிலும் மற்றையவரது பரசூட் தரையிலும் விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இரண்டு வீரர்களும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களின் உடல்நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.









# ஜனாதிபதி தேர்தலும் ஏமாற்றும் தமிழ்த் தலைமைகளும்





வி.எஸ்.சிவகரன்

ஏமாற்றுவது என்பது அரசியலில் ஒரு கலையே. நம்பி ஏமாறுவது என்பதும் வாழ்வியலின் ஒரு முறையே. இதைத்தான் வரும் ஒவ்வொரு தேர்தல்களிலும் மாறாத மந்திரமாய் ஓதுகின்றனர். தந்திர யுக்தியை பயன்படுத்தி கடந்த 70 ஆண்டுகளா, காலத்துக்கு காலம் ஆட்சியாளர்கள் ஒரே விதமான வழிமுறையே கடைப்பிடிக்கின்றனர்.

வாக்குப் பெறுவதற்காக பல்வேறு விதமான வாக்குறுதிகளை பொறுப்பின்றி அள்ளி வீசி, அதனால் தமிழ்த் தலைமைகளை ஏமாற்றி நம்ப வைத்து, ஒப்பந்தம, தார்மீக ஆதரவு, தலைவர்களுக்கு இடையேயான இணக்கத்தின் அடிப்படையில் ஆதரவு என பல வழிமுறைகளை சிங்களத் தரப்பு கையாண்டு வருகிறது.


ஒவ்வொரு முறையும் தமிழ்த் தலைமைகள் மக்கள் நலன் சார்ந்து ஏமாறுவது போல் பாசாங்கு காட்டிக் கொண்டு, தமது இருப்பை நலன் சார்ந்து உறுதிப்படுத்துகின்ற நெறிமுறைக்காக உபயோகித்து, தமது சுயநலத்துக்காக தமிழ் மக்களை வாக்களிக்க கூறுகின்ற ஏமாற்று வேலையையே தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்கள். இம்முறையும் அதுவே தொடர போகிறது. யுத்தத்தை நடத்தியவர்க்கும் அதை களத்தில் நின்று படையினரை வழிநடத்தியவர்க்கும் இடையேயான போட்டியில் களத்தில் நின்றவரை ஆதரிக்க வைத்து, தமிழ் மக்களையும் முட்டாளாக்கி, வாக்களிக்க வைத்த மூன்றாம் தர அரசியலில் தமிழ்த்தலைமைகள் ஈடுபட்டன.

பின்னர் நல்லாட்சி அரசு எனும் சொல்லாடலில் முழுக்க முழுக்க இணக்க அரசியலை நடத்தி இதயத்தில் இருக்கிறோம் என ஏமாற்று வார்த்தைகளைப்

தொடர்ச்சி ▼







# ஜனாதிபதி தேர்தலும்
# ஏமாற்றும் தமிழ்த் தலைமைகளும்

தொடர்ச்சி▲

பேசி, ஒற்றை ஆட்சிக்குள் சமஷ்டி கொண்டு வருவோம் என பசப்பு வார்த்தைகளை எல்லாம் கூறி, தமிழ் மக்களை ஏமாற்றி, தங்கள் பதவி சுகங்களை அடைவதிலும் சுகபோக வாழ்வை அனுபவிப்பதிலும் வெற்றி கண்டனர்.

கூட்டமைப்பைக் கொண்டே வடக்கில் ஆயிரம் விகாரைகள் அமைப்பதற்கும் அரசு வரவு – செலவுத் திட்டத்தில் ஆதரவு பெற்றது. மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்களாகவும் அரசின் ஏகப் பிரதிநிதிகளாகவும் நிழல் அமைச்சர்கள் போலவும் நம்மவர்கள் வலம் வந்தார்கள். நடந்தவை என்ன? புதிய அரசமைப்பும் முற்றுப் பெறவில்லை. காணாமல் ஆக்கப்பட்டுள்ளோர் விடயமோ, அரசியல் கைதிகள் விடுதலையோ, அபகரிக்கப்பட்ட நில விடுவிப்போ எதுவும் நிகழவில்லை. மாறாக தமிழ்த்தேசியம் கரைந்து போனது. அந்த நிலையை ஏற்படுத்தியவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே. அவர்கள் நடத்திய இணக்க அரசியலால் தமிழ்த்தேசிய அரசியல் சின்னா பின்னமாகியது. மக்களும் அவர்களைப் போல நலன் நாடி ஓடினார்கள். அதன் விளைவு அடுத்து வந்த தேர்தல்களில் இவர்களுக்கு புரிய வைத்தது. ஆனாலும் திருந்தவில்லை.

இப்பொழுது மக்களும் சந்தர்ப்பவாத அரசியலை பழகி விட்டனர். தமிழ் கட்சிகளும் சீர்குலைந்துவிட்டன. தலைமையற்ற நிலைக்குள் இருக்கும் தமிழ் மக்களை யார், யாரோ வழிப்போக்கர்கள் எல்லாம் வழி நடத்த முயல்கிறார்கள். அவ்வளவு மோசமான இழி நிலைக்கு தமிழ் மக்களை இட்டுச் சென்றுள்ளன தமிழ்த் தலைமைகளே.

இந்தத் தலைமைகளை நம்பிய தமிழ் மக்களுக்கு, அவர்கள் திருப்பி வழங்கிய பெரு வெகுமரியாதை தமிழ்த்தேசிய நீக்கமே.

எந்த ஜனாதிபதித் தேர்தல்களிலும் இல்லாதமை போல் இம்முறை பல வேட்பாளர்கள் களத்துக்கு வருகிறார்கள். ஒவ்வொரு வேட்பாளரும் ஒவ்வொரு விதமான வாக்குறுதிகளையும் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் முன் வைப்பதற்குரிய ஏது நிலைகள் காணப்படுகின்றன.

அறகலயப் போராட்ட அமைப்பு சுயநிர்ணய அரசியல் தீர்வை நோக்கி நகர்வோம் என்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாண சபையில் இழந்த அதிகாரங்களை மீள வழங்குவதோடு பதின்மூன்றாவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரத்தை காலநீழ்ச்சியில் பார்த்துக் கொள்ளலாம் என்கிறார். சஜித் பிரேமதாஸவும் ஒன்றுமில்லாத 13 தீர்வு என்கிறார். ஜே.வி.பி. 13 ஐக் கூட முன் வைப்பதற்குத் தயாராக இல்லை. இனி விஜயதாஸ ராஜபக்ஷ, சரத் பொன்சேகா, பொதுஜன பெரமுன வேட்பாளராக வரக் கூடிய தம்மிக பெரேரா எல்லோரும் என்ன கூற போகிறார்களோ தெரியவில்லை.

இதற்கு இடையில் “தேசமாக திரள்வோம்!“ எனப் புறப்பட்ட பொது வேட்பாளர் பிரமுகர்கள் குழு வேட்பாளர் தெரிவிலே தள்ளாடுகிறது. அது என்ன கோரிக்கையை எல்லாம் முன்வைத்துத் தமிழ் மக்களை நலிவடைந்த நிலைக்கு இட்டுச் செல்லப் போகின்றதோ தெரியவில்லை. சிங்கள வேட்பாளர்கள் போல் தான் இவர்களும் தமிழ் மக்களை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனும் நிகழ்ச்சி நிரலில் எவருக்கோ ஏங்குவது போல் விடாப்பிடியாக நிற்கிறார்கள். இப்பொழுது பரிதாபத்துக்குரிய நிலையில் வேட்பாளர் கூட கிடைக்கவில்லை. கிடைத்தாலும் எந்த கட்சியில் போட்டியிடுவது என்பதிலே தட்டுத் தடுமாறி நிற்கிறார்கள்.

ஆக மொத்தத்தில், இந்தத் தேர்தல் முழுக்க முழுக்க பதவி நலன்சார் நிலைகளை நிலைநிறுத்துகின்ற நோக்கில் ஒவ்வொருவரும் மூன்றாம் தர கருத்துகளை முன்வைத்து, வாக்காளரை கவர்ந்து எப்படி வாக்குப் பெறலாம் என்கின்ற மறைமுக நிகழ்ச்சி நிரலை உட்புகுத்தி, வாக்கு பெறவே முனைகிறார்கள். இதில் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு விதமான சூழ்ச்சிகளையும் ஏமாற்றுத் தந்திரங்களையும் பிற்போக்குத்தனங்களையும் பயன்படுத்துகின்றார். வாக்கு பெறுவதற்காக சாத்தியமற்ற சந்தர்ப்பவாத வாக்குறுதிகளை வழங்கியாவது தனது இறுதிச் சந்தர்ப்பத்திலாவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்

தொடர்ச்சி▼

# ஜனாதிபதி தேர்தலும்
# ஏமாற்றும் தமிழ்த் தலைமைகளும்

தொடர்ச்சி▲

யப்பட வேண்டும் என்பதிலே முனைப்பு காட்டுகிறார். பதவியில் இருந்து அகலும் காலத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரங்களோ அல்லது மாகாண சபை தொடர்புடைய விடயங்களிலோ தீர்வு கண்டு விடுவேன் என கூறுவது ஓர் அரசியல் கோமாளித்தனம் என்பதனை அவர் இன்னும் புரிந்து கொண்டவராகத் தெரியவில்லை.

எனவே ரணில் விக்கிரமசிங்கவின் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்களும், மாகாணசபை தேர்தலை முன்நகர்த்துவது சம்பந்தமான சட்ட நிலைபாடுகளை தெளிவுபடுத்தும் நகர்வுகளும் தெற்கிலே எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அதில் பொதுஜன பெரமுன வாக்குகளை கவருவதற்காக மிக மோசமான இனவாதத்தை தூண்டக்கூடிய வாய்ப்புகள் உண்டு. அந்த இனவாத சகதிக்குள் ஏனைய வேட்பாளர்களும் முகம் கொடுக்கக் கூடிய நிலை ஏற்படுமா எனும் கேள்வியும் இல்லாமல் இல்லை.

ஆகவே இவற்றையெல்லாம் எப்படிக் கையாள்வது, அதற்குரிய பொறிமுறை என்ன, இந்த நெறிமுறையை உபயோகித்தால் களத்தில் நின்று நிலைக்க முடியுமா என்பவற்றை அறிந்து கொள்ள வேண்டிய நிலை எழலாம்.

மாகாண சபை தேர்தல் நடக்காமல் போனதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரே காரணம். முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அப்போதைய செல்வாக்கைக் கண்டு அஞ்சியே அக்காலத்தில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே மாகாணசபை திருத்தச்சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க வழிகாட்டி, நீண்ட காலம் அத்தேர்தல் கிடப்பில் இருப்பதற்குக் காரணமானார். தேர்தல் நடத்துவதில் சட்ட சிக்கல் ஏற்பட்டிருந்தது. ஆகவே இந்த இக்கட்டான சூழ்நிலையை உருவாக்கியதே இவர்கள்தான். இதற்கு அரசு தனிக் காரணம் அல்ல. கூட்டமைப்பினர்தான் இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும்.

இவை எல்லாம் தேர்தல் காலத்து திருவிழா போல் அகன்று போய் விடக்கூடிய ஏது நிலைகளும் உண்டு. தற்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இதயசுத்தியான யோக்கியர்கள் அல்லர். அரசோடு இருட்டு வீட்டு உறவும், தமிழ் மக்கள் மத்தியில் மூச்சு விடாத உணர்ச்சிவசமான பேச்சுமாக மதுபானச்சாலைக்கு அனுமதி பத்திரம் வாங்கி, பல கோடிக்கு விற்று, கோடீஸ்வரராகியுள்ளனர். இவர்கள் தேசியம், பண்பாடு என மற்றவர்களை ஏமாற்றுகின்றனர். இது மட்டுமா? மேலும் பல கூட்டு வணிகத்திலும் ஈடுபடுகிறார்கள். எதுவும் அறியாத தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் இவர்களை நம்பி வாக்களிக்கிறார்கள் என்பதே பெரும் துர்ப்பாக்கியம். வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் அரசியல்வாதிகள் கோடிக் கணக்கில் பணமும் சலுகைகளும் பெறுவார்கள். கடந்த காலங்களிலும் இதுவே நடந்தது. யாரோ ஒரு தென்னிலங்கை வேட்பாளருக்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவளிக்க போகின்றன. குறைந்த பட்சம் அத்தியாவசிய பிரச்சினைகளையாவது தீர்ப்பதற்கு வலிமையான எழுத்து மூலமாக உடன்படிக்கைக்கு வரலாம் .

வனத்திணைக்களம், வன ஜீவ ராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை, இராணுவம் என அபகரிக்கப்படும் நிலங்களை – இந்தத் திணைக்களங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகளை – உடனடியாக நீக்க வலியுறுத்தலாம். வனத்திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட குளங்கள், இராணுவத்திடம் உள்ள விவசாயப் பண்ணைகள், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை, கட்டுக்கரை, புள்ளதான் கண்டல் மேய்ச்சல் தரை, தென்னிலங்கை மீனவர்களின் வடக்கு, கிழக்கு அத்துமீறல்கள், இந்திய மீனவர்களின் ஆதிக்கம், கல்முனை வடக்குப் பிரதேச செயலக விவகாரம், வெடுக்கு நாறிமலை, குருந்தூர்மலைப் பிணக்குகள், அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் போனோர் தொடர்பில் உண்மைகளை ஏற்றுக்கொண்டு நீதி வழங்க முன்வருதல், சிங்களக் குடியேற்றம், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளை மத்திய அரசின்கீழ் கொண்டு வருவதை தடுத்தல் போன்ற அத்தியாவசிய நெருக்கடிகளுக்கு உடனடி தீர்வுகளை வலியுறுத்தலாம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்கிறோம், சுயநிர்ணய உரிமையை – சமஷ்டியை – பெற்றுதருகிறோம், பெற்று விடுவோம் என்று தமிழ் மக்களை ஏமாற்றாமல், குறைந்தபட்சம் மக்களின் அத்தியாவசிய பிரச்சினைகளுக்காவது தீர்வு காண வழி ஏற்படுத்த வேண்டும்.

13 க்குள் மூழ்கி, இந்திய விசுவாசிகளாகி ஆசுவாசம் கொள்ளாமல்,இருப்பதும் முக்கியம்.

தற்போதைய எந்தத் தமிழ் தலைவரும் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கக்கூடிய வல்லமை உடையவர்களோ ஆளுமை உடையவர்களோ அல்லர்என்பதுவெள்ளிடைமலை. ஆகவே தலைமை இல்லை என்பது இடைவெளியாகவே இருக்கிறது. அந்த இடைவெளியை நிரப்புவதற்குரிய காலம் கனியும் வரை இவ்விதமான அத்தியாவசிய பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் எதிர்வரும் காலத்தில் தற்போதைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காலத்தால் காணாமல் போகக்கூடிய நிலைமை ஏற்படும். அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.08.2024




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குவீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப் படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.

பணவரவுக்கான வாய்ப்பு இல்லை. இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும்.




இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை.உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம். ஓய்வும் அமைதியும் தேவை.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புனரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தலைவலி அல்லது உயர் அழுத்தம் காணப்படலாம்.




இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் சுமுகமான நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள்.உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும்.நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.




இன்றைய நாள் சீராக உள்ளது. திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம்இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.




இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும்.இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.அதிக சிரமங்கள் காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.08.2024




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்தமாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப்புக்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும். அது உங்களுக்கு கவலையைத் தரும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது. அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக்கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கையாள்வதில் விழிப்புணர்வு அவசியம்.

மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக கால்களில் வலி காணபட்டும்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப்புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதியான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை. அதிகரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிரத்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும்.அதிகமான எதிர்பார்ப்புகள் கூடாது.

ஆரோக்கியம் சிறப்படன் இருக்காது.








# புனித பிதுர் தர்ப்பணம் செய்யும் ஆடி அமாவாசைத் தினம் இன்று



நடராஜன் ஹரன்

சூரிய பகவான் வட திசை நோக்கிச் செல்லும் காலம் உத்தராணயனம் எனவும் தெற்கு நோக்கிச் செல்லும் காலம் தட்சிணாயனம் என்றும் வகுக்கப்பட்டுள்ளன.

இவ்வருடம் ஆடி மாதம் 19ஆம் நாள் – ஓகஸ்ட் 4ஆம் திகதியில் – அமாவாசை வருகிறது.

ஆடி முதல் மார்கழி வரையான ஆறு மாத காலங்கள் தட்சிணாயனம். இக்காலம் தேவர்களும் இராப் பொழுது குறிப்பாக ஆடி மாதத்தில் திருமணம் போன்ற சடங்குகள் மேற்கொள்ளாது, தெய்வ வழிபாடுகளுக்கு இந்துக்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

இதுவே எமது முன்னோர்கள் கடைப்பிடித்து வந்திருக்கும் மரபாகும். இந்துக்களின் வாழ்வியலானது புனிதம் நிறைந்த பக்தி சிரத்தையுடன் கூடிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, ஆண்டின் பன்னிரண்டு மாதங்களுக்கும் இந்துக்கள் வாழ்வியலினை மையப்படுத்தி சமய அனுஷ்டானங்களுடன் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வுலகின் இயக்க நாயகனான சூரிய பகவானின் நகர்வை மையமாக கொண்டு இந்துக்கள் ஒவ்வொரு கருமங்களையும் செய்து வருகின்றார்கள். இதனால்தான் சூரியனை தந்தையாகவும் சந்திரனை தாயாகவும் வணங்கி வருகின்றார்கள்.

பன்னிரு மாதங்களிலும் வருகின்ற அமாவாசைகளில் ஆடி மாத அமாவாசைக்கு அதிக சக்தி இருப்பதாக புராணங்கள் சொல்கின்றன.

பிதுர் தேவதைகள் என்று கூறப்படுகின்ற தென்புலத்தாருக்கு உரிய திசையான தெற்கு நோக்கி சூரிய பகவான் தனது விஜயத்தை மேற்கொள்ளும் காலத்தில் வருகின்ற முதலாவது அமாவாசையே ஆடி மாதத்து அமாவாசையாகும்.

பிதிர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் எம் இறந்து போன மோட்ச நிலையினை அடைந்த மூதாதையர்களே. அதாவது இவ்வுலகிற்கு எம்மை கொண்டு வந்த தாய், தந்தையர்களுடனான வம்சத்தினராகும்.

ஆடிமாதப் பிறப்பில் இருந்து சூரியன் தெற்கு நோக்கி தனது பயணத்தை ஆரம்பிக்கின்றார். தென்புலத்தாருக்கு உரிய திசை தெற்கு. எனவே ஆடி மாத அமாவாசைத் தினத்தில் பிதுர் தேவதைகளுக்கு தர்ப்பணம் செய்வதற்கு உரிய நாளாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த அமாவாசை தினத்தன்று நாம் விரதமிருந்து எள், தர்ப்பைப் புல் ஆகியவைகளைக் கொண்டு தர்ப்பணம் செய்து புனித ஆறுகள், நதிகள், குளங்கள் மற்றும் சமுத்திரங்களில் நீராடி பிதுர்களுக்கு சமர்ப்பணம் செய்தல் வேண்டும்

இத்துடன் எம் முன்னோர்களை மனதில் நிறுத்தி எம்மாலான தான தர்மங்களை வழங்குவதுடன் எம் முன்னோர் எம்முடன் வாழ்ந்த காலங்களில் அவர்களுக்குப் பிடித்தமான உணவுகளை சமைத்து தானமாக வழங்குதல் சிறப்பு என சொல்லப்படுகின்றது

பிதிர் தேவைகளின் ஆசிர்வாதம் இப்பூவுலகில் நாம் சிறப்பாக வாழ மிக மிக அவசியமானதாகும். அவர்களின் மனம் மகிழ நம் வாழ்வு சிறந்தோங்கும். பிதுர்களின் சாபம் எம்மை அழிவடையச் செய்வதுடன் எம் சந்ததியினரையே அழித்துவிடும் என எமது சமய குரவர்கள் எமக்கு எடுத்து சொல்லி இருக்கின்றனர்.

மேலும் எமது நாயன்மார்கள் ஆடி அமாவாசைத்தினத்தில் தான் நமது பாவங்கள் விலகுகின்றன எனவும் சொல்லி இருக்கின்றார்கள்

திருவள்ளுவர் “தென்புலத்தார் தெய்வம் விருத்து ஓங்கல் தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை“ என கூறியிருக்கின்றார். இப் பரந்து விரிந்துள்ள பிரபஞ்சத்தில் தெற்குப் பக்கம் பிதிர்களின் இடமாக கருதப்படுகின்றது. இதனால் தான் எம் இறந்து போன மூதாதையர்கள் தென்புலத்தார் என சொல்லப்படுகின்றது.

மேலும் ஆடி அமாவாசை தினத்தில் காகத்திற்கு படையல் போடுவதும் முன்னோர்களை மகிழ்ச்சியாக்குவதற்கு எளிய வழியாகும்.

ஆடி அமாவாசை திதி ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மாலை 5 மணிக்கு தொடங்கி மறுநாள் மாலை 5.32 மணி வரை இருப்பதால், இன்று ஓகஸ்ட் 4ஆம் திகதி முழுவதும் நீங்கள் திதி கொடுக்கலாம்.

எனவே ஆடி அமாவாசை விரதம் நிறைந்த இந்த புனித நாளில் தீர்த் தோற்சவம் இடம் பெறும் ஆலயங்களுக்குச் சென்று பிதிர் கடமைகள்

தொடர்ச்சி ▼




# புனித பிதுர் தர்ப்பணம் செய்யும் ஆடி அமாவாசைத் தினம் இன்று

தொடர்ச்சி▲

(தர்ப்பணம்) செய்து ஆலயங்களில் இடம்பெறும் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டும் எம் மூதாதையர்களின் நல்லாட்சியுடன் இப் புவியில் மேலான வாழ்வுதனை பெறுவோம்.

### கடன் தீர ஆடி அமாவாசை பரிகாரம்

நாளை ஆடி அமாவாசை என்பதால் மதிய நேரத்திற்குள் முன்னோர்கள் வழிபாட்டை நிறைவு செய்து கொள்வீர்கள். முன்னோர்களுக்கு திதி தர்ப்பணம், படையல், வழிபாடு எல்லாம் மனநிறைவோடு முடித்து விடுங்கள். அன்றைய தினம் மாலை இந்த தாந்திரீக பரிகாரத்தை செய்தால் போதுமானது. பூஜை அறையில் விளக்கு ஏற்றி வைத்து விடுங்கள்.

உங்கள் முன்பாக ஒரு தாம்பூலத் தட்டிலோ அல்லது ஜாடியில் கல் உப்பு எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். மன நிறைவோடு குலதெய்வத்தை பிரார்த்தனை செய்து கொண்டு, இரண்டு உள்ளம் கைகளிலும் கல் உப்பை அள்ளி எடுத்துக் கொள்ள வேண்டும். கல் உப்பை இறுக்கமாக இரண்டு கைகளிலும் வைத்து மூடி கொள்ளுங்கள். கண்களை மூடி இரண்டு உள்ளங்கைகளையும், இரண்டு தொடைக்கு மேல் வைத்துக்கொண்டு, உங்களுடைய கடன் சுமையெல்லாம் தண்ணீரில் கரைக்கும் உப்பு போல கரைந்து போக வேண்டும் என்று மகாலட்சுமி தாயிடம் மனதார பிரார்த்தனை செய்து கொள்ளவும். உங்கள் பக்கத்திலேயே ஒரு பாத்திரத்தில் சுத்தமான தண்ணீரை வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த தண்ணீரில் கையில் இருக்கும் கல்லுப்பை கரைக்க வேண்டும். இந்த கல்லுப்பு கரைவது போல என்னுடைய கடனும் கரைய வேண்டும் இறைவா என்று முழுமையான பிரார்த்தனையை வைத்து விட்டு வழிபாட்டை நிறைவு செய்து கொள்ளுங்கள். கல்லுப்பை கையில் வைத்துக் கொண்டு நீங்கள் என்ன வேண்டினாலும் கிடைக்கும். அதுவும் அதை அமாவாசை தினத்தில் செய்வது சிறப்பு. அதிலும் ஆடி அமாவாசையில் இந்த பரிகாரத்திற்கு பலன் அதிகம். 04-08-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் இந்த பரிகாரத்தை செய்யலாம். இரவு 9 மணிக்கு முன்பாக இந்த பரிகாரத்தை செய்து முடித்து விடுங்கள். பரிகாரம் இவ்வளவுதான். இவ்வளவு எளிமையான பரிகாரத்தை செய்தால் கோடிக்கணக்கில் இருக்கும் கடன் அடையுமா என்று கேட்டால் நிச்சயம் அடையும். நம்பிக்கையோடு பரிகாரத்தை செய்பவர்களுக்கு. அதேபோல செல்வ வளம் அதிகரிக்க வேண்டும் என்றால் நாளைய தினம் என்ன செய்வது.


ஒரு நல்ல விஷயத்தை வசியம் செய்யக்கூடிய சக்தியானது வசம்புக்கு இருக்கிறது. நிறைய பணம் பெருக வேண்டும், வீட்டில் செல்வ கடாட்சம் வசியமாக வேண்டும் என்று ஒரே ஒரு வசம்பு துண்டை கையில் வைத்து குலதெய்வத்தை பிரார்த்தனை செய்து இன்றைய் தினம் அதை உப்பு ஜாடியில் மறைத்து வைத்து விடுங்கள். உப்பு ஜாடிக்கு அடியில் வசம்பு இருக்கட்டும்.

மேலே கல்லுப்பை கொட்டி வைத்து நீங்கள் சமையலுக்கு பயன்படுத்தலாம். உப்பு தீர தீர அந்த ஜாடியில் உப்பை சேர்த்துக் கொள்ளலாம். வருடத்திற்கு ஒருமுறை அந்த பழைய வசம்பை மாற்றினாலும் போதும். ஆடி அமாவாசை தினத்தன்று இந்த வசம்பை கல்லுப்பு ஜாடியில் வைப்பது அத்தனை சிறப்பு. கல் உப்பில் வசம்பு துண்டு இருந்தால் பண வசியம் ஏற்படும் என்பதும் நம்பிக்கை. மேலும் சொன்ன ஆன்மீகம் சார்ந்த இந்த இரண்டு தாந்திரீக பரிகாரங்களையும் நம்பிக்கை உள்ளவர்கள் செய்து பயனடையலாம்.



# ஆடி அமாவாசை தின விரதம் இன்று யாரெல்லாம் அனுஷ்டிக்க வேண்டும்?





விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா

ஆடி அமாவாசை விரதம் யார் யாரெல்லாம் அனுஷ்டிக்க வேண்டும்? எவ்வாறு அனுஷ்டிக்க வேண்டும்? யார் அனுஷ்டிக்க கூடாது? என்பதையெல்லாம் இந்துக்கள் அறிந்திருக்க வேண்டும்.

பொதுவாக ஆடி அமாவாசை என்றாலே தந்தையை இழந்தவர்கள் உபவாசம் இருந்து பிதிர்க்கடன் செலுத்தி தீர்த்தமாடலுக்கான தினம் என்பது தெரியும்.

கிழக்கில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் மற்றும் மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை மகோற்சவம் இதற்கு உகந்தது என்பர். அங்கு அந்த நாளில் ஆயிரக்கணக்கான அடியார்கள் ஒன்றுகூடி பிதிர்க்கடன் செலுத்தி வழிபடுவது வழக்கம்.

இவ் வருடத்திற்கான ஆடி அமாவாசை விரதம் இன்று ஞாயிற்றுக் கிழமை அனுஷ்டிக்கபடவிருக்கிறது.

இந்த நாளில் யார் அமாவாசை விரதம் இருக்க வேண்டும் என்பதை விரிவாக பார்ப்போம்.

பொதுவாக அமாவாசை தினத்தில் முன்னோர்களை வழிபடும் விதமாக விரதம் இருப்பது வழக்கம். யார் யார் அமாவாசை விரதம் இருக்கலாம், தை அமாவாசை தினத்தில் ஆண், பெண் ஆகியோரின் விரதம் முறை பற்றி பார்ப்போம்.

**பெண்கள் விரதம் இருக்கும் முறை:**

- திருமணமான ஒரு பெண்ணுக்கு தாய் அல்லது தந்தை இல்லை என்றாலோ, அல்லது இருவரும் இல்லை என்றாலும் அவர் விரதம் இருக்கக் கூடாது. அவருக்கு கணவர் இருக்கும் நிலையில் அவர் அமாவாசை விரதம் இருக்கக் கூடாது.

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அமாவாசை விரத முறை தை அமாவாசைக்கு மட்டுமல்ல, மற்ற மாதங்களில் வரும் அமாவாசை தினத்தில் இருக்க வேண்டிய விரத முறைக்கும் பொருந்தும். ஆடி அமாவாசை மகாளய அமாவாசை, தை அமாவாசை மிகவும் விசேஷமாக கொண்டாடப்படும், கடைப்பிடிக்கப்படும் அமாவாசையாக உள்ளது.

- பெண்ணிற்கு சகோதர்கள் இருப்பின் அவர்கள் பெண்ணின் பெற்றோருக்கு தர்ப்பணம், விரதம் இருப்பார்கள்.
- அப்பா இல்லை என்றால் அம்மா தர்ப்பணம் கொடுப்பார், விரதம் இருப்பார்.
- அம்மா இல்லை என்றால் அப்பா தர்ப்பணம் கொடுப்பார், விரதம் இருப்பார்.

அப்படி சகோதர் இல்லை, பெற்றோர் இருவரும் இல்லை என்றால் பெண்கள் கோயிலுக்கு சென்று தானம் கொடுக்கலாம், வீட்டிற்கு வந்து நான்கு பேருக்கு இலையில் சோறு போட்டு உணவளிக்கலாமே தவிர அமாவாசை விரதத்தை பெண் ஒருவர் கடைப்பிக்கக் கூடாது.

ஆடி அமாவாசை அன்று ஏன் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்?: தர்ப்பணதிற்கு உரிய நாட்கள் இதோ

1. ஒரு ஆணுக்கு தாய் இல்லாவிட்டாலோ, தந்தை இல்லாவிட்டாலோ, அல்லது இருவரும் இல்லை என்றாலோ அவர் அமாவாசை விரதத்தை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.
2. அமாவாசை அன்று உபவாசம் இருக்க வேண்டும்.
3. கண்டிப்பாக எள்ளும், தண்ணீரும் இறைத்து முன்னோர்களை வழிபட வேண்டும்.
4. அமாவாசை தினத்தில் கோயிலுக்கு சென்று நெய் தீபம் ஏற்றி வழிபடவும்.
5. இயன்றவரை யாருக்காவது உணவு தானம் செய்யுங்கள் அல்லது பசுவிற்கு அகத்திக் கீரை கொடுங்கள்

அமாவாசை அன்று பெண்கள் நன்றாக சாப்பிட்ட பின்னர் விரதத்திற்கான உணவை சமைக்க வேண்டும். கணவர் தான் விரதம் இருக்க வேண்டும். பெண்கள் விரதம் இருக்கக் கூடாது.

ஒரு கைப்பிடி அளவேனும் அன்னத்தை பெண்கள் இரவு உணவில் சேர்ப்பது பூரண ஆசி கிட்டும்.

அமாவாசை தினத்தில் முன்னோருக்கு வழிபாடு நடத்துவது அவசியம். தாய், தந்தையர்களை யார் வழிபடுகிறார்களோ, அவர்களின் பிள்ளைகளும் நல் பலன்கள் கிடைக்கும்

யாருக்கெல்லாம் தர்ப்பணம் செய்ய வேண்டும் என்பது பற்றிப் பலருக்கும் சந்தேகம் ஏற்படுவது இயல்பு.

மறைந்துவிட்ட தன் தகப்பனார், தன் தாத்தா, கொள்ளுத் தாத்தா, தன் அம்மா, தன் பாட்டி, தன் கொள்ளுப் பாட்டி, அம்மாவின் கோத்திரம் – அவர்களின் பரம்பரை, அப்பாவின் கோத்திரம் – அவர்களின் பரம்பரை என்று பன்னிரண்டு பேருக்குத் தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

மேலும், யாருமில்லாத ஆதரவற்று இறந்தவர்களுக்கும் தர்ப்பணம் செய்வது மிகவும் விசேஷமாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

புண்ணிய தலம் – தீர்த்தக் கரைகளில் தர்ப்பணம் கொடுக்க முடியாத சூழலில் வீட்டிலேயே முன்னோரை ஆராதிக்கலாம். படையல் இட்டு அவர்களை வழிபட்டு முன்னோரின் ஆசியைப் பெறலாம். பசுக்களுக்கு அகத்திக் கீரை உண்ணக் கொடுப்பது மிகவும் சிறப்பு

ஆடி அமாவாசை மற்றும் அதற்கு முந்தைய தினம் ஆகியவற்றின் மகிமையை விளக்கும் வகையில் ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது. அழகாபுரி என்ற தேசத்தின் அரசர் அழகேசன். அவருக்குப் பிறகு தேசத்தை ஆட்சி செய்ய வாரிசு இல்லை. அதற்காக புத்திரபாக்கியம் வேண்டி மனைவியுடன் தீர்த்த யாத்திரை மேற்கொண்டார். அதன் பயனாக அவருக்கு ஒரு மகனும் பிறந்தான். குழந்தை பிறந்த மகிழ்ச்சியில் அரசர் இருந்தபோது, "உன் மகன் இளமைப் பருவத்தை அடையும் போது மரணம் அடைவான்" என்பதாக ஓர் அசரீரி ஒலித்தது. மேலும் இறந்த

தொடர்ச்சி ▼

# ஆடி அமாவாசை தின விரதம் இன்று யாரெல்லாம் அனுஷ்டிக்க வேண்டும்?

தொடர்ச்சி ▲

பிறகு அவனுக்குத் திருமணம் செய்து வைத்தால், வரப்போகும் மனைவியின் மாங்கல்ய பலத்தினால் மறுபடியும் அவன் உயிர் பெறுவான் என்றும் அந்த அசரீரி கூறியது.

அசரீரி கூறியதுபோலவே அரசரின் மகனும் இளமைப் பருவம் அடைந்த போது இறந்து போனான். அரசர் இறந்துபோன தன் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கப் பெண் தேடிய போது, பெற்றோர் இல்லாமல் உறவினர்களின் கொடுமைக்கு ஆளாகி விரக்தியுடன் வாழ்ந்து வந்த ஒரு பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து வைத்துவிட்டனர். அன்று இரவு அந்தப் பெண்ணையும், அரசரின் இறந்துபோன மகனையும் காட்டில் கொண்டு சென்று விட்டுவிட்டு வந்தனர்.

அந்தப் பெண் தன் கணவன் உறங்குகிறான் என்று நினைத்துக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்ததும்தான் தான் திருமணம் செய்துகொண்டவன் இறந்துவிட்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது. அழுது புரண்டு கதறினாள். என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். தனக்குத் தெரிந்த தெய்வங்களை எல்லாம் அழைத்துக் கதறி அழுதாள். பேதைப் பெண்ணின் அழுகுரல் கேட்டு மனம் இரங்கிய அம்பிகை, இறந்துபோன அவளுடைய கணவனை உயிர் பெறச் செய்தாள்.

தனக்கு அருள் புரிந்த தேவியிடம் அந்தப் பெண், "தாயே ஈஸ்வரி, இருண்டு போன என் வாழ்க்கையை மறுபடியும் பிரகாசிக்கச் செய்தது போலவே, இந்த நாளில் உன்னை வழிபடும் பெண்களுக்கும் அருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

இந்த நிகழ்ச்சி நடந்தது ஆடி அமாவாசைக்கு முந்தின நாள் ஆகும்.

மற்றவர்களின் நன்மைக்காக வேண்டிக் கொண்ட அந்தப் பெண்ணின் உயர்ந்த குணத்தைப் போற்றும் வகையில், "மகளே, நீ வேண்டிக் கொண்டபடியே இந்த நாளில் உனக்கு நான் அருள்புரிந்த கதையைப் படித்து விட்டு, மறுநாள் ஆடி அமாவாசையன்று விரதம் இருந்து, மஞ்சள், குங்குமம் உள்ளிட்ட மங்கலப் பொருட்களை சுமங்கலிப்பெண்களுக்குத் தந்து என்னை வழிபடுபவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பதுடன், அவர்கள் இல்லத்தில் அஷ்ட ஐஸ்வர்யங்களும் உண்டாகும்" என்று வரம் தந்து அருளினாள். அந்த வகையில்



ஆடி அமாவாசை முன்னோர் வழிபாட்டுக்கு மட்டுமல்லாமல், அம்பிகையை வழிபடுவதற்கும் உகந்த நாளாகத் திகழ்கிறது.

மாதம்தோறும் வரும் அமாவாசை திதியில் மறைந்த நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்பது சாஸ்திரம். மாதம்தோறும் கொடுக்க முடியாவிட்டாலும், ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை, தை அமாவாசை ஆகிய தினங்களில் கண்டிப்பாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

சாஸ்திரப்படி ஆடி முதல் மார்கழி முடிய உள்ள காலத்தில் நம்முடைய முன்னோர்களான பித்ருக்கள் நம்மைப் பார்ப்பதற்காக இந்த உலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் பித்ரு லோகத்தில் இருந்து புறப்படும் நாள் ஆடி அமாவாசை. எனவே, அவர்களை நாம் நினைவில் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பது போலவும், அவர்களை பூமிக்கு வரும்படி அழைப்பு விடுப்பதுபோலவும் ஆடி அமாவாசையன்று அவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்கிறது சாஸ்திரம். அவர்கள் பூமிக்கு வந்து சேரும் நாள் மகாளய அமாவாசை ஆகும். எனவே, அன்று அவர்களுக்கு நாம் தர்ப்பணம் கொடுக்கவேண்டும். பித்ருலோகத்தில் இருந்து வந்த நம் முன்னோர்கள் திரும்பவும் பித்ருலோகத்துக்குச் செல்லும் நாள் தை அமாவாசை. அன்று அவர்களை வழியனுப்பும் விதமாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும். இந்த மூன்று அமாவாசை தினங்களில் நாம் கண்டிப்பாக நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும்.

முன்னோர் ஆடி அமாவாசையன்று பித்ரு வழிபாட்டை காலையிலேயே தொடங்கிவிடவேண்டும். ஏதேனும் ஒரு தீர்த்தக் கரைக்குச் சென்று நீராடி, தர்ப்பணம் கொடுத்து வரவேண்டும். மதியம் வீட்டில் மறைந்த நம் முன்னோர்களின் படங்களுக்கு மாலை அணிவித்து, விளக்கேற்றி, ஓர் இலையில் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான உணவு வகைகளைப் படைக்கவேண்டும். பின்னர் தீபாராதனை காட்டி, காகத்துக்கு உணவளிக்க வேண்டும். பிறகு வீட்டில் உள்ள பெரியவர்களை முதலில் சாப்பிடச் செய்யவேண்டும். பிறகே நாம் சாப்பிடவேண்டும். இப்படிச் செய்வதால், நம் முன்னோர்கள் மிகவும் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிக்கின்றனர். அவர்களுடைய ஆசிகளால் நம் வாழ்க்கையும் நம் சந்ததியினரின் வாழ்க்கையும் மகிழ்ச்சியும் சகல செல்வங்களும் நிறைந்ததாக அமையும் என்பது உறுதி.









# யூனியன் அஷ்யூரன்ஸ் HOPE திட்டத்துடன் சமூக நலன் பேணும் செயற்பாடுகளுக்கு உதவி

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், சமூகத்தின் நலனை மேம்படுத்தும் தனது அர்ப்பணிப்பை தொடரும் வகையில் தனது HOPE திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

உள்ளூர் சமூகங்களின் அபிவிருத்தி தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கான யூனியன் அஷ்யூரன்ஸின் வழிமுறையாக HOPE திட்டம் அமைந்திருப்பதுடன், தேசத்தின் திரண்ட முன்னேற்றத்துக்கு வலுவூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் பிந்திய நடவடிக்கை வெல்லவாய எதிலிவெவ மகா வித்தியாலயத்தில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் இதர சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மொனராகலை மாவட்டத்தின் எதிலிவெவ மகா வித்தியாலயம், வெஹெரயாய மகா வித்தியாலயம் மற்றும் பலஹருவ கனிஷ்ட பாடசாலை ஆகியவற்றுக்கு ஆறு மாத காலப்பகுதிக்கு மாதவிடாய் கால தூய்மை அணையாடைகளை விநியோகித்திருந்தது. இதனூடாக சுமார் 800 க்கும் அதிகமான மாணவர்கள் பயன்பெறுவர்.

மேலும், தேசிய விளையாட்டு போட்டி 2024 இல் சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தியிருந்த எதிலிவெவ மகா வித்தியாலயத்தின் 50 மாணவர்களுக்கு அன்பளிப்பு வவுச்சர்களையும் யூனியன் அஷ்யூரன்ஸ் கையளித்திருந்தது.

வலய மட்டத்தில் இந்தப் பாடசாலை முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், நிறுவனத்தினால் பாடசாலை புத்தகப் பைகள், ரீ-சேர்ட்கள் மற்றும் விளையாட்டு சாதனங்கள் போன்றன வழங்கப்பட்டிருந்ததுடன், மெய்வல்லுநர்களுக்கு சிறந்த வகையில் தமது திறமைகளை வெளிப்படுத்தவும், பாடசாலை சமூக மட்டத்தினுள் ஆரோக்கியமான போட்டிகர மனநிலையை கட்டியெழுப்பவும் முன்வந்திருந்தது.

மேலும், மாணவர்கள் மத்தியில் கல்விசார் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கு நூலக வளங்களை மேம்படுத்துவதிலும் யூனியன் அஷ்யூரன்ஸ் கவனம் செலுத்தியிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃப் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது உள்நாட்டு சமூகங்களுக்கு ஆதரவளிப்பதில் ஆழமாக தம்மை அர்ப்பணித்துள்ள வர்த்தக நாமம் எனும் வகையில், யூனியன் அஷ்யூரன்ஸின் உமீநு திட்டம், மக்களின் வாழ்க்கையில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான எமது அர்ப்பணிப்பை உறுதி செய்வதாக அமைந்துள்ளது. சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் முயற்சிகளில் நாம் உறுதியான நம்பிக்கையை கொண்டிருப்பதுடன், இது போன்ற செயற்பாடுகளினூடாக, வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் அத்தியாவசிய வளங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம். அதனூடாக இளைஞர்களுக்கு பிரகாசமான எதிர்காலத்துக்கு வழிகோலப்படுகின்றது." – என்றார்.

# 'தெவிநுவர எசல பெரஹர'விற்காக சியபத பினான்ஸ் பி.எல்.சி, நன்கொடை





சியபத பினான்ஸ் பிஎல்சி அதன் வருடாந்த சமூகப் பொறுப்புணர்வு பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, சமீபத்தில் முடிவடைந்த "தெவிநுவர எசல பெரஹெர 2024"க்கு இணங்க, கந்தர பொலிஸாருக்கு "No Parking" அறிவுறுத்தல் பலகைகளை நன்கொடையாக வழங்கியது.

விஷ்ணு தெய்வத்தை வணங்கிக் கொண்டாடப்படும் வருடாந்திரத் திருவிழாவான எசல பெரஹரவைக் கண்டுகளிப்பதற்காக நாடு முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான இந்து மற்றும் பௌத்த மக்கள், அங்கு வருகை தருகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும், தெவிநுவர எசல பெரஹரா, நடனம், இசை, வண்ணங்கள், யானைகள் அணிவகுப்பு என நமது தேசத்திற்கு தனித்துவமான பாரம்பரிய நிகழ்வுகளால் தெருக்களை அலங்கரிக்கிறது.

ஊர்வலத்தின் போது பொலிஸாரின் போக்குவரத்து கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இந்த அறிவுறுத்தல் பலகைகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. மாத்தறை சியபத பினான்ஸ் பிஎல்சியின் கிளை முகாமையாளர் திரு. ஜனக விபுலவினால் கந்தர பொலிஸ் அலுவலகத்தின் தலைமையக பொலிஸ் அதிகாரி தேசபந்து சேனரத்னவிடம் அவை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

சம்பத் வங்கிக் குழுமத்தின் முழுமையான துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, வடக்கு கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் கிளை வலையமைப்பைக் கொண்டுள்ளது,

இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுவதை உறுதி செய்கிறது. கடந்த 19 வருடங்களாக, இலங்கையில் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், தொழில்முனைவோர், மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர் போன்ற பலருக்கு வலுவூட்டி வருகிறது.






# 85 ஆண்டுகால வங்கிச் சேவையை கொண்டாடுகிறது இலங்கை வங்கி

இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமான இலங்கை வங்கி தனது 85 ஆவது ஆண்டுவிழாவை பெருமையுடன் கொண்டாடுகிறது.

ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலிருந்து தனது வாடிக்கையாளர்களின் பல்வேறுபட்ட தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு வங்கி காட்டிய அர்ப்பணிப்பால் விளைந்ததே இந்த 85 ஆவது ஆண்டுவிழா என்ற மைற்கல்லாகும்.

இந்த அர்ப்பணிப்பு கடந்த எட்டரை தசாப்தங்களாக நாட்டின் பொருளாதாரத்திற்கு மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது.

இலங்கை வங்கியானது 1939 ஓகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, இலங்கைப் பொருளாதாரத்தின் தூணாக நின்று மில்லியன் கணக்கான மக்களின் வங்கிச் சேவை அனுபவத்தை மாற்றியமைத்துள்ளது.

சாதாரண மக்களுக்கும் நிதிச் சேவைகளை அருகிற் கொண்டுசென்றதிலிருந்து தற்கால டிஜிட்டல் வங்கித் தீர்வுகள் வரை இலங்கை வங்கியின் பயணம் எப்போதும் மெச்சும்படியாகவே இருந்து வந்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான ‘டெக்னோவேஷன்’ விருதுகளில் இலங்கை வங்கியின் அர்ப்பணிப்பு அங்கீகரிக்கப்பட்டதோடு இதில் வங்கியானது “ஒட்டுமொத்த விருது – டிஜிட்டல் கொடுப்பனவுகளில் சிறந்து விளங்கியமைகான தங்க விருது, “அனைத்து மக்களையும் உள்ளடக்கிய நிதிச் சேவைகளை வழங்கும் ஆண்டின் சிறந்த வங்கிக்கான தங்க விருது, மற்றும் “ஆண்டின் சிறந்த பொதுவான ATM இயக்கி” போன்ற விருதுகளை வாரிக் குவித்தது. நாம் ஏன் இலங்கையின் முதன்மையான நிதி நிறுவனமாக இருக்கிறோம் என்பதற்கு இந்த பாராட்டுக்கள் சான்றுபகர்கின்றன.

சவால்கள் நிரம்பிய இக்காலகட்டத்தில் புகழ்பெற்ற ‘பாங்கர்’ சஞ்சிகையால், இலங்கை வங்கி ‘ஆண்டின் சிறந்த வங்கி – இலங்கை’ என்ற கௌரவத்தைப் பெற்றது.

அத்துடன் தொடர்ந்து 13ஆவது ஆண்டாக உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட ஒரே இலங்கை வங்கி என்ற கௌரவத்தையும் வென்றமை வங்கியின் நிலையான வளர்ச்சியையும் வாடிக்கையாளர்கள் வங்கி மேல் கொண்டுள்ள நம்பிக்கையையும் பறைசாற்றுகிறது.

புலம்பெயர் தேசங்களில் அரும்பாடுபட்டு உழைத்துத் தேடிக்கொண்ட வெளிநாட்டு நாணயங்களை பாதுகாப்பாக நாட்டுக்கு அனுப்பியமைக்காக புலம்பெயர் இலங்கையர்களுக்கு வெகுமதி அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ‘பிட்ட பிட்ட ரட்ட தாகி’ நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமான நடாத்தி முடித்தமை 85 ஆவது ஆண்டின் தனித்துவமான முயற்சிகளில் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் மாபெரும் இறுதிப் பரிசாக 30 மில்லியன் ரூபாய் பெறுமதியான, முற்றிலும் தளவாடமிடப்பட்ட ஆடம்பர வீடொன்று அதிர்ஷ்டசாலி வெற்றியாளருக்கு அண்மையில் வழங்கப்பட்டது.

‘85ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், கடந்து வந்த பாதையை பெருமிதத்துடன் பார்க்கும் நாம் இந்த நாட்டிற்கும் அதன் மக்களுக்கும் சேவையாற்றும் உறுதியுடன் வரும்நாட்களை எதிர்பார்த்துள்ளோம்’ என இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ரஸல் பொன்சேகா தெரிவித்தார்.












# SLIC ஜெனரல் - RDB கைகோர்க்கின்றன

ஸ்ரீலங்கா இன்ஷூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனம் பூரண காப்பீட்டை எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு அதிக அணுகல் மற்றும் வசதியை உறுதி செய்வதற்காக அபிவிருத்தி நிதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட முன்னணி நிதி நிறுவனமான பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் (RDB) ஒரு மூலோபாய வங்கி காப்பீட்டு பங்காளித்துவத்தில் இணைந்துள்ளது.

இரு நிறுவனங்களினதும் உயர்மட்ட நிர்வாகப் பிரதிநிதிகளின் முன்னிலையில், அண்மையில் களனியில் உள்ள RDB தலைமை அலுவலகத்தில் இந்த சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டது.

இந்த மைல்கல் நிகழ்வு, கிராமப்புற மக்களுக்கு அணுகக்கூடிய சிக்கன விலையில் காப்பீட்டு சேவைகளை வழங்கி கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது.

இந்த வங்கி காப்பீட்டு கூட்டாண்மை மூலம், SLICGLஇன் பல்வேறு வகையான காப்பீட்டு சேவைகளை RDBஇன் நாடு தழுவிய கிளை வலையமைப்பு மூலமாக பெற்றுக் கொள்ளலாம்.

இன்றுவரை, நாடு முழுவதுமான 272 கிளைகள் ஊடாக RDB ஆனது ஆறு மில்லியனுக்கும் அதிகமான விசுவாசமான கணக்கு வைத்திருப்பவர்களைக் கொண்டுள்ளது. இப்போது வாடிக்கையாளர்கள் தங்கள் வழக்கமான வங்கிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் போது மோட்டார், தீ மற்றும் பொதுக் காப்பீட்டுக் கொள்கைகள் உள்ளிட்ட காப்பீடுகளை வசதியாகப் பெறலாம்.

பிரஜைகளின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புதுமையான, நம்பகமான, வசதியான மற்றும் அணுகக்கூடிய காப்பீட்டுத் தீர்வுகளை வழங்குவதற்கான SLICGLஇன் உறுதிப்பாட்டுடன் இந்த இணைவு ஒத்துப்போகிறது. RDB இன் பரந்த கிளை வலையமைப்பு மற்றும் நம்பகமான நிதி நிறுவனமாக அங்கீகாரம் ஊடாக SLICGL ஆனது அதிக வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடிய அதேவேளை அனைத்து சமூகங்களுக்கும் ஒரு பூரண காப்பீட்டு சேவையுடன் வரும் மன அமைதியை வழங்க முடியும்.

மேலும், SLIC ஜெனரலுடனான கூட்டாண்மையானது RDBஇன் சேவைத் தொகுப்பை விரிவுபடுத்துவதோடு சமூகத்தில் நன்மையான தாக்கத்தை உறுதிசெய்யும் வங்கிச் சேவைகளை நெறிப்படுத்தும் நிதியாளர்களாக பூரண காப்பீட்டை வழங்க சந்தர்ப்பம் அளிக்கிறது.

SLICGL மற்றும் RDB ஆகிய இரண்டுக்கும் இந்த மூலோபாய வங்கி காப்பீட்டு கூட்டாண்மை அவர்களது வணிக கோப்புறையை பலப்படுத்தவும் பரந்துபட்ட வாடிக்கையாளர்களை அணுகவும் அனுமதி அளிக்கிறது. மேலும், இது கொழும்பிற்கு வெளியே வசிப்பவர்களுக்கு நிதிசார் சேவைகளை விரிவுபடுத்தும் அதே நேரம் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துகிறது.




# செலான் வங்கி, ADBயின் செயற்பாட்டு மூலதனம், நீண்ட காலக் கடன்களை SME களுக்கு வழங்குகிறது

செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் (GoSL) இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையை (SME) மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ADB யிலிருந்து செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட காலக் கடன்களை வழங்கவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் செலான் வங்கி, விவசாயம், மீன்பிடி, அலங்கார மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு இந் நிதி உதவியை வழங்கும். செலான் வங்கி, இலங்கையில் ADB யின் நிதியுதவியின் ஒரு நிலையான பங்காளியாக இருந்து வருகிறது. ADBயின்கடன்வரம்புகள்மூலம்வங்கியானதுகடந்தகாலங்களில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

தங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்க விரும்பும் ளுஆநு கள், மூன்று வருட காலத்திற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம் ஊடாக பயனடைவர். மேலதிகமாக, கட்டடம் கட்டி முடிக்கும் பணி, நிலையான சொத்துக்களை வாங்குதல் அல்லது வணிக தேவைக்கான வாகனங்களை வாங்குதல் போன்ற பிற தேவைகளுக்காக, திருப்பிச் செலுத்த ஐந்து வருட கால அவகாசத்துடன் கூடிய கடன்கள் கிடைக்கும்.

செலான் வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய முன்முயற்சிகளில் ஒன்று SME Hub ஆகும். இது SME களின் தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடி எண்ணக்கரு ஆகும். Seylan SME Hub ஆனது, வங்கியின் பரந்த நாடளாவிய கிளை வலையமைப்பின் ஊடாக வசதியான மற்றும் வேகமான நிதிச் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. SME Hub மூலம் வழங்கப்படும் பிரத்தியேக வங்கிச் சேவைகள் ளுஆநுகளின் நிதிப் பயணத்திற்கு வழிகாட்டும் சிறப்பு ஆலோசனைச் சேவையை உள்ளடக்கியுள்ளது.

மேலும், ஏற்றுமதி சார்ந்த ளுஆநுகள் செலான் வங்கியின் புதுமையான "ஏற்றுமதி நிபுணர்" சேவையை அணுகும் வாய்ப்பை பெறுவர். இந்த சலுகையானது ளுஆநுகளுக்கு உலக சந்தையில் சிறந்து விளங்க அவர்களுக்கு தேவையான ஆதரவையும் அறிவுப் பகிர்வையும் வழங்கி அவர்களை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. "ஏற்றுமதி நிபுணர்" சேவையானது, SMEகளுக்கு சவாலான காலங்களை எதிர்கொள்ளவும் செழித்து வளரவும் தேவையான கருவிகள் மற்றும் நிதியறிவு ஆகியவற்றை வழங்குகிறது.



இந்த மூலோபாய ஒத்துழைப்பு பற்றி கருத்து தெரிவித்த செலான் வங்கியின் கிளைக் கடன் பிரதி பொது முகாமையாளர் ரணில் திசாநாயக்க, இந்த முயற்சி MSME/SME துறையில் ஏற்படுத்தும் சாதகமான தாக்கம் தொடர்பாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

"சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஆதரவளிக்கும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதில் நாங்கள் பெருமையடைகிறோம். எங்களின் போட்டித்தன்மை வாய்ந்த கடன் வழங்கல்கள், SME Hub மற்றும் "ஏற்றுமதி நிபுணர்" போன்ற அர்ப்பணிப்புள்ள சேவைகள் மூலம் செலான் வங்கி பல்வேறு தொழில் துறைகளை சார்ந்த வணிகங்களின் வெற்றிக்கு ஊக்கியாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது." – என்றார்.

# Dialog Suraksha உங்கள் செல்வங்களை இமை போல் காத்திடும் இலவச சேவை

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, 'Dialog Suraksha'-வை அறிமுகப்படுத்துகிறது.

இணையவெளியில் உங்கள் பிள்ளையை பாதுகாத்திடும் ஒரு இலவச சேவையே இது. இதில் உங்கள் பிள்ளை இணையவெளியில் கற்கையிலும் விளையாடுகையிலும் அவர்களை காத்திடும் வகையில் இச்சேவைகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

Dialog Suraksha பெற்றோருக்கு நிம்மதியையும் சிறார்களுக்கு ஆரோக்கியமான முறையில் டிஜிட்டலை பாவிக்கும் பழக்கத்தையும் அளிக்கிறது. நிகழ்நிலையில் அவர்கள் செய்யும் அத்தனை நடவடிக்கைகளையும் ஒரே இடத்தில் கண்காணிக்க இது இடமளிக்கிறது.

சிறார்கள் கல்விக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் அதிக நேரத்தை நிகழ்நிலையில் செலவிடுவதிலிருந்து காக்க இது உதவுகிறது.

Dialog Suraksha பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் முழுமையாக இணையத்தை முடக்குதல், பாதுகாப்பற்ற வலைத்தளங்களை முடக்குதல், கற்றல் மற்றும் வேலை சார்ந்த உள்ளடக்கங்களை மட்டும் அணுக அனுமதித்தல், நிர்ணயித்த நேரவரையறைக்குள் இணையப்பாவனையை மட்டுப்படுத்தல் ஆகிய வசதிகளை அளிக்கிறது.

மேலும் பிள்ளையின் இருப்பிடத்தை நிகழ்நேரத்தில் அறிந்து கொள்ளும் அம்சமும் இதில் உண்டு.




உங்கள் பிள்ளைக்கு ஒரு மொபைல் இணைப்பை வழங்குவதாயின் அஞ்சாமல் டயலொக்கை தெரிவு செய்யலாம். Dialog Suraksha இணையப் பாதுகாப்பு சேவை உங்கள் பிள்ளையை எங்கிருந்தும் எந்நேரத்திலும் காக்கும்.

உங்கள் பிள்ளையின் உலகை பாதுகாப்பானதாக்கி எப்போதும் அவர்களோடு இணைந்திருங்கள். அனைத்து டயலொக் மொபைல் மற்றும் Home Broadband வாடிக்கையாளர்களும் றறற.னயைடழப.டம மூலம் இச்சேவையை இலவசமாக செயற்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.